வெற்றிமணி வெளியீடு 20

# சிவத் தமிழ்

Free Circulation

இலவசம்



திருமூலர் மனித இனப் பெருக்கம் பற்றி எடுத்துக் கூறுகிறார்.

குரும்பசிட்டியும் சைவச் சொற்பொழிவுகளும்

பிரதம ஆசிரியர்:

கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

2011



# JET TRAVELS

e-mail:jettravels@on.aibn.com

சகல நாடுகளுக்கும் குறைந்த செலவில் திருப்தியுடன் பறந்துசெல்ல நாடுங்கள்



4429 Sheppard
-Avenue East
Scarborough,On.
M1S 1V3- Canada

Tel: 416 291 0177

கனடாவில் - Toronto வுக்கு அண்மித்த பகுதியில்......

## வீடு, வியாபாரம் வாங்க, விற்க.....

RED CARPET
Royal Realty Ltd., Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED






## கரு கந்தையா

Real Estate Broker.

**Bus: 416-284-5555** (24 Hrs)

* 20 Years Real Estate Experience
* Multi Award Winner

880 Ellesmere Road,Suite 204, Toronto, ON., M1P 2W6



தளபாட விற்பனை நிலையம்

தரமானது உறுதியானது நம்பிக்கையானது!

## EQUIP UNIT TRUST

சுன்னாகம் கிழக்கு
சுன்னாகம்
யாழ்ப்பாணம்

Tel: 021 2240110

கற்பக விநாயகர் துணை

## KAJAMUGAN HARDWARE

கஜமுகன் ஹாட்வெயர்



Hardware Merchants
Importers of
Materials,Cement,
paints,Electrical
Goods,Cycle,Cycle parts &
Accessories

KMH

Tel:2833
147,149. ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

# சிவத் தமிழ்

அன்பே சிவம்! சிவமே தமிழ்!!

மலர் 7 2011 இதழ் 20





ஆரம்பம் 2004

பிரதம ஆசிரியர்
கலைஞானமணி
கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A
Tel.02351 458862
e.mail. vettimaniy@hotmail.com

உதவி ஆசிரியர்
ஆன்மீகத்தென்றல்
த.புவனேந்திரன்

கௌரவ ஆசிரியர்
கலாநிதி கவிஞர் வி.கந்தவனம்
திரு.பொ.கனகசபாபதி
(முன்னாள் அதிபர் மகாஜனாக்கல்லூரி)
இலக்கியச் செம்மல் இந்துமகேஷ்

வெளியீடு
Dr.M.K.S.Sivakumaran.B.F.A
Post box 2765
58477 Lüdenscheid - Germany
Tel.02351 458862

கனடா
Dr.Kathir.Thuraisingam
31 Gennela Sqare
Toronto,On
M1B 5A3
Canada

இலங்கை
திருமதி.வலன்ரீனா இளங்கோவன்.B.A
தபால்பெட்டி ஒழுங்கை
பலாலிவீதி
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்
யாழ்ப்பாணம்


# இனிய சங்கமம்



## குழந்தை காட்டிய வித்தை

அன்று எனக்கா அவனும்.
இன்று அவனுக்கா நானும் காத்துக்கிடக்கின்றோம்.

தாத்தாவுக்கு நேரம் போகுதில்லையே என்ற தவிப்பு! தாய்க்கு நேரம் போய்விட்டதே என்ற தவிப்பு! (அட மகன் வரப்போகிறான் ஒன்றும் செய்து முடிக்க வில்லையே!)
தாத்தா என்று கொண்டு பாடசாலையால் ஓடி வருகின்றான். அவனுக்கு தெரியும் அம்மாவை விட தாதாத்தாதான் தன்னுடன் சேர்ந்து விளையாடுவார் என்று.
பேரன் அவசரம் அவசரமாக, தனது பையில் இருந்து ஒரு காந்தக்கட்டியை எடுத்து ஒரு சாதாரண இரும்புத் துண்டைத் தொடுகின்றான். அது காந்தத்துடன் ஒட்டிக்கொள்கின்றது.
தாத்தா கண்ணை மூடுங்கோ! இந்த இரும்புத் துண்டைக் காந்தமாக்கின்றேன் பாருங்கள் என்று சொல்கின்றான்.
இப்போ காந்தத்தையும் அந்த இரும்புத் துண்டையும் உரஞ்சுகின்றான். தாத்தா இனி கண்விழிக்கலாம். இப்போ பாருங்கள்! இந்த இரும்புத்துண்டு காந்த மாகவிட்டது. இந்தச் சிறு ஆணியைத் தொடுங்கோ என்கின்றான். ஆணி காந்தமாக மாறிய அந்த இரும்புத் துண்டில் சட் என்று ஒட்டிக்கொண்டது.

“என்ன வந்ததும், வராததும் விளையாட்டு. ஓடிவந்து முகம் கழுவி சாப்பிடலாம்” என்று என் பேரனை என்னிடம் இருந்து பிரித்துச் செல்கின்றாள் என் மகள்.

நான் அவன் காந்தமாக்கிக் காட்டிய அந்த இரும்புடன் ஆணியாய் ஒட்டிப்போய் நிற்கின்றேன். என்னால் குழந்தை காட்டிய வித்தையில் இருந்து மீளமுடிய வில்லை. குழந்தையும் தெய்வமும் ஒன்று.

**காந்தத்தைச் சேரும் இரும்பு தானே காந்தமாவது போன்று, கடவுளே! உன்னில் நான் கலப்பேனாக.**

என்ற தத்துவத்தை அந்தக் காந்த விளையாட்டுச் சொல்லித் தந்துவிட்டது!

**காந்தம் இரும்பைக்
கவர்ந்திழுத்தா லென்ன அருள்
வேந்தன் எம்மை இழுத்து
மேவுவனோ பைங்கிளியே**
-தாயுமானவர்.

மு.க.சு.சிவகுமாரன்

# ஏகநாதர்



## நான் பெற இருந்த புண்ணியத்தை இங்கேயே பெற்றுவிட்டேன்

ஏகநாதர் என்பவர் இந்தியாவில் மிகப் பெரிய ஒரு ஞானி. அவர் ஒரு முறை காசியில் இருந்து புனித கங்கை தீர்த்தத்தை குடத்தில் சுமந்து கொண்டு இராமேஸ்வரத்திற்கு யாத்திரை சென்றார். பக்தர்கள் கூட்டம் ஒன்று அவருடன் சேர்ந்து கொண்டது.

போகும் வழியில் வெய்யிலினாலும், தாகத் தினாலும், இறக்கும் தருவாயில் இருந்த ஒரு கழுதையைக் கண்டார்.

அக்காட்சி அவரது மனதைத்தொட்டது. அவர் இராமேஸ்வரருக்கு என நீண்டதூரம் சுமந்துகொண்டு வந்த புனித நீரைக் கழுதைக்குக் குடிக்கக் கொடுத்தார். கழுதை துயர் நீங்கி மெதுவாகக் கண்விழித்துப் பார்த்தது.

ஏகநாதருடன் வந்தவர்கள் ஏகநாதரைப் பார்த்து “தாங்கள் என்ன காரியம் செய்து விட்டீர்கள்.
இதற்காகவா கங்கையின் புனித நீரை இவ்வளவு தூரம் சுமந்து வந்தீர்கள். புனித நீரை இராமேஸ்வரத்திற்கு எடுத்து வந்து, இராமேஸ்வரரை அபிஷேகம் செய்ய இருந்த புண்ணியத்தை இழந்துவிட்டீர்களே” என மனவேதனையுடன் கூறினர்.

அதற்கு ஏகநாதர் “நான் செய்த காரியத்தால் இறைவன் கோபப்படமாட்டார்.

உண்மையிலேயே மகிழ்சியடைந்திருப்பார் ” என்றார்.
அங்கு பெற இருந்த புண்ணியத்தை தான் இங்கேயே பெற்று விட்டதாக எண்ணிக் கொண்டு யாத்திரையைத் தொடர்ந்தார்.


Visit our new show room...

சுந்தர்சன் Suntharsan

Distributors of Electrical items and Electrical Appliances,Water Pumps.

தொலைபேசி இல:
021 222 2751
021 459 1569

சுந்தர்சன்
(மத்திய சந்தை முன்பாக)
பிரதான வீதி,
மானிப்பாய்
யாழ்ப்பாணம்.






Tel:077 662 2981
021 222 8929,060 221 8435

356 கஸ்தூரியர் வீதி,நாவலர் சந்தி.யாழ்ப்பாணம்
6B உப்புமடம் சந்தி. கே.கே.எஸ்.வீதி யாழ்ப்பாணம்.




# எதிரிகளை அழிக்க ஒரே வழி!

மனிதன் தோல்வியின் மூலமே புத்திசாலி ஆகின்றான்.

மிருகத்தை மனிதானாக்குவதும், மனித னைத் தெய்வம் ஆக்குவதும் மதம்.

கடவுளை தாம் விரும்பும் உருவத்தில் ஒவ்வொரு மதப்பழகப்படி ஒவ்வொருவரும் வணங்கலாம்.

பணி செய் அதற்குப் பெயர் தவம். தன்னலமற்று மக்களுக்கு உழைக்க வேண்டும். மக்களுக்கு உழைப்பதை தாழ்வாக எண்ணாதே அவ்வாறு உழைக்கும் பணி தெய்வத்திற்குச் செய்யும் திருத் தொண்டைப் போன்றது.

செல்வம் படைத்தவன், செல்வம் இல்லா தவன் மேல் செலுத்தும் ஆதிக் கத்தைத் தவிர்க்க வேண்டும். அறிவுடையவன் அறிவு குறைந்தவன் மேல் செலுத்தும் ஆதிக் கத்ததை விட வேண்டும்.

முப்பத்து மூன்று கோடிப் புராண தெய்வங் களிடத்தும், மேலும் அவ்வப்போடு நம்மி டையே அன்னிய நாட்டவர் புகுத்தியிருக்கும் இதர தெய்வங்களிடத்தும், நம்பிக்கை இருந்தது. ஆனாலும் ஒருவனிடத்தில் தன்னம்பிக்கை இல்லாவிட்டால் அவனுக் குக் கதி மோட்ஷமில்லை.

இவனை நம்பு அல்லது அவனை நம்பு என்று மற்றவர்கள் சொல்கிறார்கள். ஆனால், நான் சொல்கிறேன். முதலில் உன்னிடத்திலேயே நீ நம்பிக்கை வை. அதுதான் வாழ்க்கைக்கு வழி.

எப்போதும் விரிந்த மலர்ந்து கொண்டே இருப்பது தான் வாழ்க்கையாகும். சுருங்கி விடுவது மட்டும் கவனித்துக் கொண்டு, சோம்பல் வாழ்க்கை வாழும் சுயநலக்காரனுக்கு நரகத்தில் கூட இடம் கிடையாது.

எதிரிகளை அழிக்க ஒரே வழி அவர்களை நண்பர்களாக்குங்கள்.

பசியால் நலிந்து வாழும் மக்களிடையே சென்று சமயப் பிரசாரம் செய்வது அவர்களை அவமதிப்ப தாகும். பட்டினி கிடக்கும் மனிதனை அணுகி, அவனுக்குத் த்த்துவ போதனைகள் செய்வது மேலும் அவனை அவமதிப்பதாகும்.

ஒருவன் நன்மையிலிருந்து அறிவைப் பெறுவது போலவே, தீமையிலிருந்து அறிவைப் பெறு கிறான்.


பிறருடைய உத்தரவுக்குப் பயந்து பயந்து நடப்பவர்கள் நாளடைவில் சிந்திக்கும் சக்தியை இழந்து விடுகிறார்கள்.


உங்களுக்குள் இருப்பதை உங்கள் உழைப்பாலே வெளிக்கொணர முயலுங்கள். பிறரைப் பார்த்து நடிக்காதீர்கள். பிறரிடம் காணப்படும் நல்ல பண்புகளைப் கற்றுக் கொள்ளுங்கள்.

**சுவாமி. விவேகானந்தர்**

# மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம்

திருமதி.வல்ரீனா இளங்கோவன் B.A Hons





தலச்சிறப்பு :-

மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம் மிகவும் பழமையானது தேவாரப்பாடல் பெற்றது. மூர்த்தி, தலம் தீர்த்தம் மூன்றிலும் சிறப்புடையது கேட்க முத்திதரும் தலம். உமையம்மை தடாதகைப் பிராட்டியாகவும், சிவபெருமான் சுந்தர பாண்டியர் ராகவும், முருகப்பெருமான் உக்கிர பெருவழுதி யாகவும் திருவுருக்கொண்டு அரசாட்சி செய்த திருநகர் மதுரையம்பதியாகும். குடைச்சங்கப் புலவர்கள் வீற்றிருந்து தமிழ் ஆராய்ந்த இடம்.

மூர்த்தி நாயனார், விபூதி, உருத்திராக்கம், சடைமுடி என்ற மூன்றையும் துணையாகக் கொண்டு மும்மையாள் உலகாண்ட நகரம் அரிமர்த்தன பாண்டிய மன்னனிடம் மாணிக்க வாசகப்பெருமான் 'தென்னவன் பிரமராயன்" என்னும் பெயருடன் மந்திரியாய் இருந்து ஆய்ச்சி செலுத்திய தலம் திருஞானசம்பந்தர் அனல்வாதம், புனல்வாதம் செய்தும் திருநீற்றுப் பதிகம் பாடி பாண்டிய மன்னரின் வெப்பு நோயைத் தணித்து சைவ சமயத்தை தழைக்கச் செய்த தலம் திருஞான சம்பந்தரின் வரலாறு கேட்டுப் பால் சுரக்கப்பெற்ற தலையன் பிரானாகிய மங்கையக்கரசியாரும், சைவம் தலைக்க அனுகூலராய்யிருந்த குலச் சிறையாரும் வாழ்ந்த தலம் சிவபூசையின் மகிமையயை உலகம் அறிந்து உய்யும் வண்ணம் சோமசுந்தரப்பெருமான் தாமே தம்மை ஆன்மார்த்த மூர்த்தியாகப் பிரதிட்டை செய்து பூசித்த 'இம்மையே நம்மை தருவார்' எழுந்தருளியிருக்கும் தலம் பாண பத்திரருக்கு பெருமான் பாசுரம் எழுதிக்கொடுத்த தலம் தருமபுர ஆதீன ஆதிகுருமூர்த்தி ஸ்ரீ குருஞான சம்பந்தர் ஆன்மார்த்த வழிபாட்டிற்கு சொக்கலிங்கப் பெருமானை பெற்ற தலம். சக்தி பீடங்கள் 64இல் முதல்பீடமான மீனாட்சி பீடத்தையுடைய சக்திக்குப் பிரதான தலம் இராமர் இலட்சுமணர்களும், பிறதேவர்களும், முனிவர்களும் பூசித்து பெறு பெற்றதலம். திருக்கோவிலைச்சுற்றிலும் தமிழ் மாதங்களின் பெயரைத் தாங்கிய வீதிகள் அமையப்பெற்றதலம். ஆண்டு முழுவதும் திருவிழா நடைபெறும் தலம். மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தின் பரப்பளவு 17 ஏக்கர் ஆகும்.

மூர்த்தி சிறப்பு: சுந்தரரேசுவரர் :

இங்கு எழுந்தருளி அருள்பாலிக்கும் மூர்த்தி சுயம்பு லிங்கமாகும். இவரே சோம சுந்தரக்கடவுள், சுந்தரேஸ்வரர், மீனாட்சி சுந்த ரேஸ்வரர், கல்யாண சுந்தரர், சண்பக சுந்தரர், சொக்கநாதப்பெருமான், எனவும் போற்றப்படுகின்றார். இத் தலத்தில் தான் அடியார்கள் பொருட்டு 64 திருவிளையாடல்கள் நிகழ்த்தி அருள்பாலித் துள்ளார். மற்றும் பாண்டி மன்னன் இராஜசேகரன் பொருட்டு அவனின் வேண்டுகோளுக்கு இரங்கி கால்மாறி ஆடிய சிறப்புடைய பெருமான் வெள்ளி யம்பலம் எனப்படும் இரசத சபையில் எழுந் தருளியுள்ளார். மேலும் மாணிக்கவாசகர் பொருட்டு வந்தி என்னும் சிவபக்தி மிகுந்த பெண்ணிடம் பிட்டு உண்டு மண்சுமந்து பிரம்படி பட்டு வாழும் மூர்த்தியாக விளங்குகின்றார். சுவாமி எழுந்தருளி யிருக்கும் இந்திரவிமானம் 8 யானைகளால் தாங்கப்பெறுவது சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். மேலும் ஆவணி மூலப்பெருவிழாவில் சுவாமிக்கு பட்டாபி சேகம் நடத்தப்பெற்று செங்கோல் வழங்குவது சிறப்பம்சம் ஆகும்.

மீனாட்சி அம்மை:

இங்கு அருள்பாலிக்கின்ற அன்னை அருள்மிகு மீனாட்சிஅம்மை ஆவார். தமிழில் அங்கயற்கன்னி என்பதாகும். இதற்கு மீன்போன்ற கண்களை உடையவள் என்பது பொருள் மீன்தனது முட்டைகளை தன்பார்வையிலேயே தன்மயமாக்குவது போல தேவியாரும் தம்மை தருசிக்க வரும் அடியார்களை அருட்கண்ணால் நோக்கி உள்வினைபோக்கி மகிழ்கின்றாள். மேலும் மீன் கண்ணுக்கு இமையில்லாமல் இரவும் பகலும் விழித்துக் கொண்டிருப்பது போல தேவியாரும் கண்ணிமையாமல் உலக உயிர்களை எப்போதும் காத்து வருகின்றாள் என்று எஸ்.கிராஸ் என்னும் அறிஞர் கூறுகின்றார்.

இவரது சிறப்பில் கன்னிபுரம், மீனாட்சி பட்டினம் எனப்பெயர் பெற்று இவர் பால் இன்நகரம் விளங்குகின்றது. அருமிகு மீனாட்சியம்மன் நின்ற கோலத்தில் இரண்டு கைகளுடன் அருள்பாலிக் கின்றார். திருமலை நாயக்கர் காலத்தில் அம்மை பெண்குழந்தையின் திருவுருக்கொண்டு வந்து குமரகுருபரர் அருளிய மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், அரங்கேற்றம் செய்யத பொழுது குமர குருபரர்க்கு முத்துமாலை அணிவித்துச் சிறப்பித் தும், ஆங்கில கலெக்டர் பிட்டர் ரோஸ் என்பவரின் உயிர்காத்து அருளிய சிறப்பையும் உடைய வராவார். இத்தலத்தின் தலவிருட்சம கடம்பமரம்

தீர்த்தச் சிறப்பு:

பொற்றமரைக்குளம், எழுகடல், வைகை, தெப்பக் குளம், புறத்தொட்டி, நின்மாலியத் தீர்த்தம் கொண்டாளி, கிருதமாலை முதலிய எழுதீர்த் தங்களைக்கொண்ட இத்தலத்தில் முதன்மையானது சிவகங்கை எனப்பெயர்பெறும் பெற்றாமரைக்குள மாகும். இத் தீர்த்தம் இந்திரன், சிவபெருமானை வழிபட பொன்தாமரை மலர்களை அருளிய சிறப்புடையது. உலகப்பொதுமறையான திருக்குறள் அரங்கேற்றம் பெற்ற சிறப்பையுடையது இத்தலம். சங்ப்புலவர்களுக்கு சங்கப்பலகையை அளித்த சிறப்பையும் கொண்டது. சிவபெருமான் நாரைக்கு அருளிய வரத்தின் படி இன்றளவும் மீன் மற்றும் பிறநீர் வாழ் உயிர்இனங்களும் இல்லாத சிறப்பை யுடையது.



# சமயங்களுக்கு அப்பால், சில சமயம்....

- சிவப்பிரியன்

மதங்கள் யாவும் வாழ்வை வளமாக்கவும், ஒழுக்க நெறிமூலம் படைப்பின் மூலத்தை அறியத்தருவதாகவும், அன்பே சக்தியின் வடிவமாகவும், உள்ளதையே உணர்த்தி நிற்கின்றன. சில சமயங்களில் அவர் அவர் சமயங்களுக்கு அப்பால் அன்பு பொது சக்தியாகப் பிரகாசிப்பதும் உண்டு.

கடமை செய்யும் போது அங்கே அதிகாரம் தெரியாது, தொண்டு செய்யும் போது தனக்கே தன் முகம் தெரியாது. இங்கு உள்ள படத்தைப்பாருங்கள். கொட்டும் மழையில் சிறுவர்கள் யேர்மனியில் உள்ள குறிஞ்சிக்குமரன் ஆலயத்தில் காவடி எடுக்கின்றார்கள். முருகனுக்கு மட்டுமல்ல காவடி பிடிக்கும். இங்கு காவடி பிடித்துள்ள அத்தனை இளங்குமரன்களுக்கு காவடி பிடிக்கும்.

மழைக்கு நம்மில் பெரியவர்கள் கூட ஒதுங்க இடம் தேடும் வேளை, சிறுவர்களின் மனதை மகிழ்விக்கவும், நான் உங்கள் பக்கம் நிற்கின்றேன் என்பது போல் குடை ஏதும் இன்றி குடையாக அந்தச் சிறுவர்களுக்குள் சிறுவனாக வந்து நிற்கின்றார் அந்த நகரக்காவலர்.

அவர் மதம் தெரியாது. அவர் பெயர் தெரியது, அவர் முகம் கூட முன்பு அறியாது. ஆனால் அச்சமயத்தில் சிறுவர்களுக்கு துணையாக நிற்கவேண்டும், அதுவும் முகம் மலர நிற்கவேண்டும். என்ற எண்ணத்தில் அந்தப் பழனி மலை உச்சிக்கே சென்றுவிட்டார். சிவனுக்கு முருகன் ஓம் எனும் மந்திரத்தின் உட்பொருளை உபதேசிக்கும் போது அதே சிவன் நின்ற நிலையில் இவரும் நிற்கின்றார்.

காவலர் என்றதன் அர்த்தம் உலகெங்கும் இப்படி விரியவேண்டும். அன்பே சிவம் என்பதனை உணரவேண்டும். அன்பு கொண்ட உள்ளங்களைக் காணும் போதெல்லாம் அன்பே சிவமாய் எண்ணி வணங்கவேண்டும்.

**அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்த பின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே**

-திருமந்திரம்.

# இல்லாளும் மனைவியும்

***கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்***

இன்று உலகெங்கும் பெண்கள் முன்னேற்றம் பற்றிப் பேசப்படுகின்றது. பெண்ணின் திறனும் ஆற்றலும் ஆக்கப்பணிகளில் பெரிதும் வேண்டப்படுகின்றன. மேலைத்தேசத்தில் கிளர்ந்த பெண்விடுதலை என்ற கருத்துக் கீழைத் தேசத்திலும் பரவிநிற்கின்றது. ஆனால் தமிழர் பண்பாட்டு வாழ்வியலில் பெண் விடுதலை பெற்றவளாக மட்டுமன்றித் தலைமைப் பொறுப்பு ஏற்றிருந்தமைக்கு சான்றுகள் பல தமிழிலக்கியத்திலே காணப் படுகின்றன.

மனிதன் உணவைத்தேடி அலையும் வாழ் வாயினும் வளர்ச்சி பெற்று ஓரிடத்திலே நிலையாக வாழ்வு நடத்திய போதுதான் பெண்ணிடம் தலைமைத்துவம் வந்து சேர்ந்தது. ஆணும் பெண்ணுமாய் கூடிவாழும் நிலையில் ஆண் வெளியில் சென்று உணவுத் தேடத்தில் செயற்பட்டான். பெண் தங்குமிடத்தை நிர்வா கிக்கும் செயற்பாட்டிலே ஈடுபட்டாள். குடும்பம் என்ற அமைப்பைப் பேணும் பணியையும் மேற்கொண்டாள்.

இவ்வாறு ஆணும் பெண்ணும் ஒன்றாய் வாழ்ந்த இடத்தை “மனை” என்றும் “இல்லம்” என்றும் அழைத்த மரபைத் தமிழிலக்கியங்கள். பதிவு செய்துள்ளன.

மனை என்னும் சொல் நிலையாக ஆணும் பெண்ணும் இணைந்து வாழும் இடமாகக் கருதப்பட்டது. இல்லம் என்ற சொல் கூட்டுக்குடும்பமாக பலர் சேர்ந்து வாழும் இடத்தைக் குறிக்கும்.

இதனால் மனையை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றிருந்த பெண் “மனைவி” என்ற சிறப்பான பெயரைப் பெற்றாள்.

நற்றினை என்னும் பழந்தமிழ்ப்பாடலில் வரும் பின்வரும் அடிகள் இதற்கு சான்று பகர்கின்றன.

**வெவ்விருந்து அயரும் மனைவி**
**மெல்லிறைப் பணைத்தோள் துயிலமர் வோயே**
**(பாடல்:121)**

இங்கு வருகின்ற புதியவிருந்தினரைப் பேணி மகிழும் மனைவியின் மென்மையான தோளிலே உறங்கும் ஆண்பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளது. மனையின் தலைவியாக பெண் செயற்பட்டதை இப்பாடல் சுட்டிக்காட்டியுள்ளது. மேலும் மனைவியின் தலைவனாக ஆண் எவ்விடத் திலும் குறிப்பிடப்படவில்லை. அதனால் இன்று வரை **மனைவி** என்ற சொல்லுக்கு எதிர்பாற் சொல்லும் தோன்றவில்லை.

குடும்ப வாழ்க்கையில் குழந்தைப்பேற்றின் மூலம் அடுத்த தலைமுறை தோன்றிய போது மனையின் அமைப்பும் மாறுபட்டது. பலர் கூடி வாழும் இல்லமாக வளர்ச்சி பெற்றது. இவ் வளர்ச்சியால் பெண்ணின் தலைமைத்துவம் வளர்ச்சி பெற்றது. இல்லத்தை ஆளும் தலைமைப் பொறுப்பால் **இல்லாள்** என்ற சிறப்புப் பெயர் பெண்ணுக்கு வழங்கப்பட்டது.

உலகப்பொது மறையாம் திருக்குறள் எழுதிய வள்ளுவர் இல்லாளின் குண இயல்புகளைத் தமது நூலிலே பதிவு செய்துள்ளார்.

**மனைமாட்சி இல்லாள் கண் இல் ஆயின் வாழ்க்கை**
**எனை மாட்சித்து ஆயினும் இல்** (குறள்:52)

இக்குறளில் இல்லாளின் சிறப்புத்தகமையை **மனைமாட்சி** என வள்ளவர் குறிப்பிட்டுள்ளார். மனைக்குத் தலைவியாக இருக்கும் பெண்ணி டம் இல்லத்தை ஆளும் நிர்வாகச்சிறப்பு இருப்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

இல்லாள் இல்லறம் செய்யும் ஆணுக்கு நல்ல நல்ல வாழ்க்கைத் துணையாவாள் என வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். பெண்ணின் கற்பின் திண்மையும்,சொற்காக்கும் திறனும், சோர்விலாத தன்மையும், நிறைகாக்கும் பண்பும் அவளது தலைமைத்துவத்திற்கு அணியாக நிற்பதை முதலில் எடுத்துக் கூறியவர் வள்ளுவரேயாகும்.

இன்றைய கால கட்டத்தில் பெண்கள் இல்லத்தை அளும் நிலைக்கு மேலாக சமூகத்தையும் நாட்டையும் ஆளும் நிலைக்கு உயர்ந்துள்ளாள். வெறுமனே பட்டறிவு கொண்டு மனைத் தலைமைப் பொறுப்பை வகித்த மகளிர் தற்போது படிப்பறிவும் பெற்று நாட்டையாளும் தகமை பெற்றுள்ளனர்.

“மனைவி” என்ற சொல்லே தற்போது பயன்பாட்டில் உள்ளது.

இல்லம் என்ற சொல் சுருங்கியபொருளையே தருகின்றது. சிறுவர் இல்லம், முதியோர் இல்லம்,என்ற பொருளில் பயன்பாட்டில் உள்ளது. பண்டைய கூட்டுக்குடும்பம் இப்போது கூறுபடுத்தப்பட்டுவிட்டது.

அதனால் பெண்மையின் ஆளும் சிறப்பும் தலைமைத்துவ நிலையும் மதிப்பிழந்துவிட்டன. ஆணே தலைமைத்துவம் பெற்றவனாக, ஆளுந் திறனுடையவனாகக் கருதப்படுகின்றான்.

ஆனால் பெண்ணின் தலைமைத்துவம் **தாய்மை** என்ற பணியில் என்றும் தொடரும். இது இயற்கையின் தீர்ப்பு என்பதனை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்

# குரும்பசிட்டியும் சைவச் சொற்பொழிவுகளும்

- கவிநாயகர் வி. கந்தவனம்



சன்மார்க்க சபை மண்டபத்தில் – குன்றக்குடி அடிகளாருக்கு வித்துவசிரோமணி சி. கணேசையர் அவர்கள் தாம் எழுதிய உரைவிளக்கக் குறிப்புக்களைக் கொண்ட தொல்காப்பியப் பிரதிகளை உபகரிக்கின்றனர். — 11-6-53

நினைத்துப் பார்த்தால் நெஞ்சம் நெகிழும். ஆராய்ந்து பார்த்தால் அது ஓர் அற்புத காலம் என்ற முடிவு முகிழும்.

முழுக்க முழுக்கச் சைவக் கிராமமாக விளங்கிய ஊரிலே சைவச் சொற்பொழிவுகள் நடக் காமல் இருந்திருக்குமா?

சொற்பொழிவு ஓர் உன்னதமான கலை. தாயகத்தில் இதனை வளர்த்தெடுத் தவர் நல்லைநகர் தந்த ஆறுமுக நாவலர் அவர்கள். நாவலர் என்ற பட்டம் அவருக்குத் திருவாவடு ஆதினத்தால் வழங்கப்பெற்றது. அந்த அளவுக்குத் தமிழ்நாட்டிலும் அவர் பெயர் பெற்ற சொற்பொழிவாளராக வலம் வந்தவர்.

சொல்வன்மைக்கு வள்ளுவர் பெருமான் ஓர் அதிகாரமே ஒதுக்கியிருக்கின்றார். அன்றும சரி, இன்றும் சரி, சொல்ல வல்லவருக்குச் சமுதாயத்திலே தனி மதிப்பு இருந்தது; இருந்து வருகின்றது. சொல்லப்போனால் எந்தத் துறையை எடுத்துப பார்த்தாலும் அந்தத் துறையில் ஆட்சி செலுத்துகின்றவர் அவர் களாகத்தான் இருப்பார்கள்.

இத்தகை கலையைக் குரும்பசிட்டியில் வளர்த்த பெருமை சன்மார்க்க சபைக்கு உண்டு. சபையில் தமிழ், சமய விழாக்களுடன் கலைவிழாக்கள், குறிப்பாக நாடக விழாக் களும் அடிக்கடி நடப்பதுண்டு. இத்தகைய விழாக்களிற் சொற்பொழிவுகள் முக்கியமான அங்கமாக அமையும். தமிழ் சமயம் சார்ந்த பேச்சுப் போட்டிகளை நடத்தி இளஞ்சந் ததியினரின் நாவன்மையை வளர்த்த பெருந் தொண்டையும் சன்மார்க்க சபை செய்து வந்தது. பல அமைப்புக்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் இப் போட்டிகளிற் பங்குபற்றின. அப்படிப் பங்கு பற்றிச் சன்மார்க்க சபையின் பரிசில் களைப் பெறுவதை மிகுந்த பெருமையாக அவர்கள் கருதினார்கள். இப்போட்டிகளாற் பேச்சுக்கலை வளர்ந்ததோடு குரும்பசிட்டியின் புகழும் வளர்ந்ததெனின் மிகையாகாது.

பெருவிழாக்களிற் சொற்பொழிவுகளுக்குப் பெயர்பெற்ற அறிஞர்கள் வெளி ஊர்களி லிருந்து அழைக்கப்படுவார்கள். அதிபர் ஹண்டி பேரின்பநாயகம், வித்துவான் கணேசையர், திரு. சோ. சிவபாதசுந்தரம், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, பேராசிரியர் சு. வித்தியானந்தன் போன்ற பெரியவர்கள் வருகை தந்து சொற்பெருக்காற்றிய சபை சன்மார்க்க சபை. அவர்களை திரு. த. இராசரத்தின உபாத்தியாரும் இரசிகமணி கனக செந்திநாதனும் மிகுந்த மரியாதையுடன் வரவேற்பது கண்களுக்கு விருந்தாகவும் உள்ளத்துக்கு உவகையாகவும் இருந்த அனுபவம் மறக்க முடியாதது.

சைவச் சொற்பொழிவுகள் ஆண்டுதோறும் இடம்பெறும் திருவிடங்களாகத் திகழ்ந்தவை குரும்பசிட்டியின் இருபெருங் கோயில்கள். சித்திவிநாயகர் ஆலயம் வைகாசியிலும் முத்துமாரி அம்மன் ஆலயம் மார்கழியிலும் கொடியேறும். கோடியேற்றப் பெருவிழாக் காலத்தில் சன்மார்க்க சபையின் ஏற்பாட்டில் குரும்பசிட்டி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் பத்து நாட்களும் சைவச் சொற்பொழிவுகள் சிறப்பாக நடக்கும்.

சொற்பொழிவுகளுக்கு சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, ஆசிரியர் விநாய மூர்த்தி, பண்டிதர் சங்கரப்பிள்ளை, சைவப் புலவர் செல்லத்துரை, கவிஞர் கதிரேச பிள்ளை, கலாநிதி நா. சுப்பிரமணியன், பண்டிதர் இ. நமசிவாயம், அருட்கவி விநாசித் தம்பி, கவிஞர் வி. கந்தவனம், பாலபண்டிதர் உமா மகேஸ்வரன், ஆசிரியர் ஆறுமுகம் போன்றவர்கள் அழைக்கப்படுவதுண்டு.

இவர்கள் எல்லோருமே அ.்.கி அகன்ற அறிஞர்கள். நன்றாகப் பேச வல்லவர்கள். அதாவது, கோளாரும் வேட்ப மொழியும் நாவன்மை படைத்தவர்கள்.

சொற்பொழிவு நிகழ்வுக்குப் பெரிதும் இரசி கமணி செந்திநாதன் அவர்கள் தலைமை தாங்குவார்கள். அவர் இல்லாத நாட்களில் ஆசிரியர் திரு. மு. இராமலிங்கம், திரு. ஏ.ரி. பொன்னுத்துரை, கவிஞர் வி. கந்தவனம் ஆகியோரும் தலைமை தாங்கி நடத்தி யிருக்கின்றார்கள்.

சொற்பொழிவுகள் வெளிமண்டபத்தில் நடை பெறும். ஒரு பக்கம் ஆண்களும் ஒரு பக்கம் பெண்களுமாக மண்டபம் கேட்போரால் நிறைந்திருக்கும். முழுமையான ஆர்வத்தடனும் கவனத்துடனும் சொற்பொழிவுகளை மக்கள் கேட்டு மகிழ்வர். அயலூர் அன்பர்களும் இச்சொற் பொழிவுகளுக்குத் திரண்டெழுவது வழக்கம். செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம். அச்செல்வத்தின் மகிமை அறிந்தவர் அக்காலத்து மக்கள்.

யார்யார் எந்தெந்த நாட்களிற் பேசுவார்கள் என்பதை அறிவிக்கும் நிகழ்ச்சிநிரல் முன் கூட்டியே வெளியிடப்பட்டிருக்கும். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பேசுகின்ற நாளில் கூட்டம் மிக அதிகமாக இருக்கும். மண்டபத்தில் இருக்க இடமிருக்காது. அதனால் கோயில் முன்றிலும் மக்களால் நிரம்பி வழியும். அவர் நாவசைந்தால் தமிழகிலமும் அசைந்த காலம் அது.

இவ்வித சைவச் சொற்பொழிவுகள் சித்தி விநாயகர் ஆலயத்திலும் வைகாசித் திரு விழாக் காலத்தில் நடைபெறுவதுண்டு. இவற்றை முன்னின்று நடத்தத் தொடங்கியவர் சன்மார்க்க சபையின் இளைஞர் மன்றத் தினராவர். இம்முயற்சியானது சைவ ஒழுக்கத் திலும் சமயச் சொற்பொழிவுகளிலும் குரும்பசிட்டி இளைஞர் எந்த அளவுக்கு ஊறியி ருந்தனர் என்பதைக் காட்டுவதாக அமைந்தது.

இவர்கள் எத்தனையோ சைவப் பெரியவர் களின் குரல்கள் ஒலித்த புண்ணிய பூமியின் கண்ணிகள்!

இந்த இளைஞர்கள் இன்று வளர்ந்து விட்டார்கள். சைவத்தைச் சென்ற இட மெல்லாம் வளர்த்தும் வருகின்றார்கள். சைவச் சொற்பொழிவுகள் வீண்போகவில்லை; வீண் போக மாட்டா!

**பகவத்கீதை**

இறைவன் மனிதனுக்குச் சொன்னது 'பகவத்கீதை' பகவான் கிருஷ்ணன் அருச்சுனனுக்கு அருளியது.

**திருவாசகம்**

மனிதன் இறைவனுக்குச் சொன்னது 'திருவாசகம்' மாணிக்கவாசகரிடம் சிவபெருமான் வேண்டி எழுதியது.

**திருக்குறள்**

மனிதன். மனிதனுக்குச் சொன்னது திருக்குறள். திருவள்ளுவர் படைத்தது.




**இலக்கியச்செம்மல் இந்துமகேஷ்**

கடவுள் இருக்கிறாரா?

திடீரென ஒரு கேள்வியை எழுப்பிவிட்டு என்னைப் பார்த்துக்கொண்டிருந்தான் ஒரு எட்டுவயதுச் சிறுவன்.

என்னிடமிருந்து ஒரு பதிலை - அதுவும் தான் விரும்புவதான ஒரு பதிலை எதிர்பார்ப்பவன் போன்ற பாவனையுடன் நின்றிருந்தான் அவன்.

„ கடவுளா? அப்படியென்றால்? "

நான் திருப்பிக் கேட்டேன்.

என்னிடமிருந்து பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருந்தவன் எனது மறுகேள்விக்குப் பதிலைத் தேடிக் கொரண்டிருந்தான்.

" கடவுள்.. கடவுளைத் தெரியாதா? கடவுள்தான்! ...

அதற்குமேல் என்ன சொல்வது என்று புரியாமல் தனது தலையைச் சொறிந்துகொண்டான்.

" உங்களுக்குத் தெரியும் சொல்லுங்கள்! கடவுள் இருக்கிறாரா? "

மறுபடியும் அவன் தன் கேள்விக்குப் பதில்தேட முயன்றான்.

இவனுக்கு எப்படிப் புரியவைப்பது?

" கடவுள் இருக்கிறாரா இல்லையா என்பதை அப்புறம் பார்த்துக்கொள்ளலாம். முதலில் கடவுள் என்றால் என்னவென்று சொல்!" என்றேன் மீண்டும்.

அவனது முகத்தில் சட்டென ஒரு ஒளி பிறந்தது.

" எனக்கு விளங்கிவிட்டது. கடவுள் இல்லை... என்ன? " நான் ஏதும் சொல்லாமலேயே தான் என்னிடமிருந்து எதிர்பார்த்த பதிலை தானாகவே எடுத்துக் கொண்டான் அவன்.

" நீ நினைத்தது சரிதான். கடவுள் என்று எதுவுமே இல்லை! "

- நான் அழுத்திச் சொன்னதும் அவன் என்னைச் சந்தேகத்தோடு பார்த்தான்.

" கடவுள் இருக்கிறார்.. என்ன? " அவனே திருப்பிக் கேட்டான்.

„ நீ சொல்வது சரிதான்.. கடவுள் இருக்கிறார்! " என்றேன்.

அவன் முகத்தில் இப்போது ஒரு குழப்பம் தெரிந்தது.

„ ஒன்றைச் சொல்லுங்கள். இருக்கிறாரா இல்லையா? „

„ நான் சொல்வது இருக்கட்டும்..நீ முதலில் சொல்.. கடவுள் என்றால் என்ன?" என்றேன் நான் மீண்டும்

„ உங்களுக்குத் தெரியாதா?...கடவுள் என்றால் கடவுள்தான்!"

„ ஓ.. அந்தக் கடவுளைப் பற்றிக் கேட்கிறாயா? "

„ எந்தக் கடவுள்:?"

" நீ சொன்னாயே அந்தக் கடவுள்!"

" நான் எந்தக்கடவுளைச் சொன்னேன்? கடவுள் என்றால் கடவுள்தான் என்றேன்!" என்றான் அவன் தடுமாற்றத்துடன்.

" அதைத்தான் நானும் சொல்கிறேன். அந்தக் கடவுள்தான்!" என்றேன் நானும் விட்டுக் கொடுக்காமல்.

" அப்போ கடவுள் இருக்கிறார்.. என்ன? " என்றான் அவன் மீண்டும்.

" கடவுள் இருப்பதால்தானே நாம் கடவுளைப் பற்றி இப்போது பேசிக்கொண்டிருக்கிறோம்! " என்றேன்.

" முதலில் இல்லை என்றீர்கள்...? " அவன் தயங்கினான்.

" நான் எப்போ சொன்னேன்.. நீதான் சொன்னாய்"

" நானா.. எப்போது சொன்னேன்?"

" கடவுள் இருக்கிறாரா என்று கேட்டது நீதானே...? கடவுள் இல்லையோ என்ற சந்தேகம் வந்ததால்தானே நீ அப்படிக் கேட்டாய்...? "

" சரி.. கடவுள் இருக்கிறார் என்றால் இப்போது அவர் எங்கே? "

" இங்கேதான்! " என்றேன்.

„ இங்:கேயா..? " அவன் ஆச்சரியத்துடன் கண்களை அகலவிரித்தான்.

" இங்கே என்றால் எங்கே? "

" இதோ இங்கே! " என்று அவனைச் சுட்டினேன்.

„ இது நான்..! என்னையா கடவுள் என்கிறீர்கள்? "

„ நான் உன்னைச் சொல்லவில்லை.. நீ இருக்கும் இடத்தில் கடவுள் இருக்கிறார் என்று சொல்கிறேன்! "

„ அது எப்படி முடியும் இங்கே நான் இருக்கிறேனே! “ இங்கே இருப்பது நீதானா? அதெப்படி உறுதியாகச் சொல்கிறாய்?“

„ இது நான் என்பது எனக்குத்தெரியாதா என்ன?“ „ இது நீதான் என்பது உனக்கு எப்படித் தெரியும்? உன்னை உன்னால் பார்க்க முடியுமா?

உனது முகம் உனக்குத் தெரிகிறதா? “

„ ஆனால்.. இது நான்தான்! “ அவன் தயக்கத்துடன் சொன்னான்.

„ உன்னை உன் கண்களுக்குத் தெரிய வில்லை. ஆனால் உனக்கு என்னைத் தெரிகிறது.. எனக்கும் இப்படித்தான் என்னை எனக்குத் தெரியாது.. ஆனால் உன்னைத் தெரிகிறது! உன்னை உன்னால் பார்க்க முடியாதவரை உன்னருகில் இருக்கும கடவுளையும் நீ பார்க்கமாட்டாய்...

ஆனால் உன்னைப் பார்க்க முடிந்த எனக்கு உன்னருகில் கடவுள் இருப்பதையும் பார்க்க முடிகிறது! “„ உண்மையைத்தான் சொல் கிறீர்களா? மெய்யாகவே கடவுள் என்னருகில் இருக் கிறாரா?“

அவன் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே கேட்டான்.

„ மெய்யாகவே இருக்கிறார்...அவர் உன்னரு கில் வந்ததால்தான் நீ அவரைப்பற்றிக் கேட்க ஆரம்பித்தாய்! “„ அப்படியென்றால் கடவுள் இதற்கு முன்பு எங்கே இருந்தார்? “


„ நீ பிறப்பதற்கு முன்பு எங்கே இருந்தாயோ அங்கே? “

„ நான் பிறப்பதற்கு முன்பு எங்கிருந்தேன்? “

„ அது கடவுளுக்குத்தான் தெரியும்! “ என்றேன்.

„ ஓ.. அதுதான் கடவுளா? “ என்றான் அவன் ஆச்சரியத்துடன்.

# மீள் எழுச்சியின் பிள்ளையார் சுழியாக குரும்பசிட்டி அம்பாள் பிரதிஷ்டை


நன்றி:Kurumbasiddyweb.com

குரும்பசிட்டி நன்நகர் தன்னில் விரும்பியிருந்து இன்னருன் சுரப்பவள் முத்துமாரி அம்பிகை. இருபது ஆண்டுகளுக்கு மேலாக ஊரைவிட்டு அணைத்து மக்களும் வெளியேறிய நிலையிலும் அம்பிகையைத் தமது மனக்கோவிலில் தாங்கிப் பூசித்து வந்தனர். அவளது திருவடி தரிசனம் எப்போது கிடைக்கும் என ஏங்கியிருந்தோர் பலப் பலராவார்.

2011 தை மாதம் ஊரின் ஒரு பகுதியிற் காலடி எடுத்து வைக்க வழிபிறந்த போது மக்கள் முதற்தேடியது அம்பிகை யைத்தான்.

ஆலயவளாகத்திலிருந்து தென்புறமாகச் சுமார் 200 மீற்றர் தொலைவில் ஓர் அரசமர நிழலில் அம்பிகையை ஒத்த விக்கிரகம் ஒன்று வைக்கப்பட்டு பூசிக்கப்பட்டிருந்தமை அவதானிக் கப்பட்டது. அது அம்பிகையின் விக்கிரகந்தான் என்று அனுமானித்துத் திரு.அ. யோக நாதன் தைப்பொங்கல் தினத்தன்று பொங்கல் செய்ய முற்பட்டார். ஊரில் மக்கள் கூடிய பொது நிகழ்வாக இத்தினம் அமைந்தது.

குறித்த விக்கிரகம் அம்மனதுவானால் தொடர்ந்தும் அதனை அங்கே அதே நிலையில் விட்டு வைப்பதா? என்ற எண்ணம் ஏற்பட்டது. கிராம அபிவிருத்திச் சங்கச் செயற்குழுவுடன் ஆலோசித்து அவ்விக்கிரகத்தை எடுத்துச் சென்று சுத்திகரித்த அம்பாளுடைய மூல விக்கிரகம் தானா என்று முடிவுசெய்ய முனையப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர்களான ப.கோபாலகிருஷ்ண ஐயர், திரு.ம.வேதநாதன், ஆகியோர் பார்வையிட்டு இவ்விக்கிரகம் எம் அன்னையுடையதே என்றும் எதுவித சேதமும் விக்கிரகத்தில் இல்லை என்றும் உறுதிப்படுத்தினர். கிடைத்தற்கரிய பெறும்போறாக மக்கள் மகிழ்ந்தனர். இந்நிலையில் அம்பாள் ஆலய வளாகத்தினை துண்டித்த உயர் பாதுகாப்பு வலய வேலிக்கு வெளியே அமைந்திருக்கும் எஞ்சிய சிறு நிலப்பரப்பில் சுமார் ஐந்து லட்சம் ரூபா செலவில் தற்காலிக கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு அங்கு 04.04.2011 அன்று அம்பாளது விக்கிரகம் பிரதிஷ்டை பெற்றது.

கிராம அபிவிருத்திச் சங்கத்தின் முதற்செயற்றிட்டமாக மீள்குடியமர்வுக்கான பிள்ளையார் சுழியாக இச் செயற்றிட்டம் புனிதமாக நிறைவேறியது.

ஆ.சி.நடராஜா



கே. எஸ். சுதாகர்
(அவுஸ்திரேலியா)

# குழந்தைக்குப் புரிந்தது!

அன்று விஜயதசமி. வித்தியாரம்பம். ஏடு தொடக்கும் நாள். கவினுக்கு ஏடு தொடக்கு வதற்கு பெற்றார் பாலனும் வனஜாவும் விரும்பினார்கள். கவினும் அவனது அக்கா ஆரபியும் அதிகாலை எழுந்து, அம்மம்மாவின் துணையுடன் குளித்தார்கள். தேவாரம் பாடினார்கள். அவர்கள் இருவரும் அம்மம்மா வின் சொல் கேட்பார்கள். குறும்புகள் செய்யும்போது அம்மம்மா "ஏய்!" என்று சத்தமிட்டவாறே தடியைத் தூக்கிக் கொண்டு கலைப்பாள். கவினுக்கு அந்த "ஏய்!" மீது "ஒரு" கோபம்.

வெள்ளிக்கிழமைகளில் அம்மம்மா நீண்ட நேரம் தேவாரம் படிப்பாள். அந்த நேரங்களில் சுவாமி அறைக்குள் புகுந்து *"Change the song"* என்பான் கவின். அந்த நேரங்களில் அடி விழாது என்று அவனுக்குத் தெரியும்.

ஆரபி சனிக்கிழமைகளில் "கொம்மியூனிட்டி ஹோலில்" *(Community Hall)* நடைபெறும் தமிழ்ப்பாடசாலையில் தமிழ் படிக்கின்றாள். மெல்பேர்ணில் அரச பாடசாலையில் தமிழ் கற்பிக்கப்படுவதில்லை. சிட்னி அதற்குப் புறவிலக்கு.

தமிழ்ப்பாடசாலையில் ஒவ்வொருவருடமும் நவராத்திரியும் கிறிஸ்மஸ் பண்டிகையும் கொண்டாடுவார்கள். காலை 10 மணியளவில் பாடசாலையில் எல்லோரும் சந்திப்பதாக ஏற்பாடு. பொங்கலை பாடசாலையில் செய்வதென்றும், ஏனைய பலகாரங்களை வீட்டிலிருந்து கொண்டு வருவதென்றும் ஏற்கனவே தீர்மானித்திருந்தார்கள்.

வனஜா அதிகாலையில் எழுந்து நீராடி, வடை செய்தாள். பாலன் நண்பர்கள் வீடு சென்று பூக்கள் பறித்துக் கொண்டு வந்தான். அம்மம்மா ஆரபியையும் கவினையும் வெளிக்கிடுத்தினாள். நான்கு வயதான கவின் வேட்டி - சால்வையில் நின்றான்.

பத்துமணிக்கெல்லாம் "கொம்மியூனிட்டி ஹோலி"ற்கு போய் சேர்ந்து விட்டார்கள். வளவிற்குள் காரை நிறுத்திவிட்டு பொருட் களை இறக்கிக் கொண்டிருந்த போது காரொன்று அருகே வந்து நின்றது. உள்ளே இருந்த தாரனி "ஹோர்ண்" அடித்து வனஜாவை அருகே வரும்படி கூப்பிட்டாள். அவளின் மகளும் ஆரபியுடன் தமிழ் படிக்கின்றாள்.

"குறை நினைக்காதையுங்கோ தங்கைச்சி, சுண்டல் செய்தனான். இதை ஒருக்கா குடுத்து விடுவியளோ?" கார்க் கண்ணாடியைப் பதித்து வனஜாவைக் கேட்டாள் தாரனி. தொடர்ந்து,

"நேரம் போய் விடுமோ எண்டு கெதி கெதியா செய்து கொண்டு வந்தனாங்கள். வீட்டிலை மகள் தனிய. இன்னும் குளிச்சு முழுகேல்லை. பல்லுக் கூடத் தீட்டேல்லை எண்டால் பாருங்கோவன்" சொன்னாள் தாரனி.

முகத்தில் துர்நாற்றம். கண்ணில் பீளை. வனஜாவும் பிள்ளைகளும் காரினில் இருந்து இறங்கி திகைத்து, அருவருத்து ஆடாமல் அசையாமல் நின்றார்கள்.

"ஆரபி... அந்த அன்ரியிட்டை இருந்து அதை வாங்குங்கோ."

"நாங்கள் கொஞ்சம் பிந்தி வருவம். சொல்லி விடுங்கோ" சொல்லிக் கொண்டிருக்கும் போதே கார் புறப்பட்டது.

பூசை முடிந்து ஏடு துவக்க ஆரம்பித்தார்கள். அருகேயிருந்த முருகன் கோயிலில் இருந்து ஐயர் வந்திருந்தார். ஒரு வாழை இலையில் நிறைகுடம், பால் பழங்கள் திருநீறு சந்தனம் குங்குமம். இன்னொரு இலையில் நெல் பரப்பி எதிரே ஐயர்.

கவினின் முறை வந்தது.

"அ.. ஆ.. இ.. ஈ.." என்று கவினின் கைவிரலைப் பிடித்து நெல் மணிக்குள் எழுதிக் காண்பித்தார் ஐயர். அவனுக்கு ஏற்கனவே எல்லாம் அத்துப்படி. சுறுசுறுப்பாக ஒன்றும் விடாமல் எழுதினான். "இவன் வருங்காலத்தில் ஒரு டாக்டராக வருவான்" என்று கவினைப் புகழ்ந்தார் ஐயர். தனக்குள்ள ஆங்கிலத்தின் வித்துவத்தைக் காட்டுவதற்காக, ஆங்கிலத்திலும் ஏடு தொடக்க ஆசைப்பட்டார் ஐயர். கவினின் கையைப் பிடித்து நெல் மணிக்குள் அழுத்தி "ஏ...பி..'' *(A... B..)* என்று சொல்லத் தொடங்கினார்.

கவினுக்கு ஒன்றும் புரியவில்லை. ஐயருக்கும் ஒன்றும் புரியவில்லை. மீண்டும் கவினின் கையைப் பிடித்து அமிழ்த்தி "ஏய்... ஏய்.." என்றார். கவினுக்கு அம்மம்மாவின் நினைப்பு வந்தது. தடி தன்னை முறைத்துப் பார்ப்பதாகவும் அடுத்தது அடிதான் என உறுதியாக, கையை இழுத்துப் பறித்து ஓடத் தொடங்கினான். ஓடும்போது "ஸ்டுப்பிட் கைய் *(Stupid Guy)*" என்று சொல்லிக் கொண்டு ஓடினான். ஐயர் உட்பட எல்லாரும் திகைத்துப் போனார்கள்.

"அவனை ஒன்றும் செய்யாதீர்கள்.... அவன் வளர்ந்து டாக்டராக வருவான்" என்றார் மீண்டும் ஐயர்.

வெளியில் கார் ஒன்று வந்து நின்றது யன்னலால் எட்டிப் பார்த்தாள் ஆரபி. ஆட தாரனி அன்ரி.. ஆட என் அழகாக இப்ப பூவும் பொட்டுமாக குளித்துவிட்டு வந்திருக்கிறா என்பதைக்கண்டு வியந்து கொண்டு சென்றாள்.

சுற்று நேரத்தில் தாரனியின் கைகள் வனஜாவின் தோளைத் தொட்டன.

:தங்கைச்சி... இப்பதான் வாறன். எங்கை பிள்ளை என்னுடைய பிரசாதம் கொண்டுவந்த பாத்திரம்" என்றாள் பவானி.


"ஆரபி ... அன்ரியின்ரை பாத்திரத்தை ஒருக்கா எடுத்துக் குடுங்கோ" என்றாள் வனஜா.

ஆரபி தயங்கினாள்.

"அம்மா...! அன்ரி குளிக்காமல் பல்லுத் தீட்டாமல் பிரசாதம் கொண்டு வந்ததாலை நாங்கள் அதை இஞ்சை கொண்டு வரேல்லை. அதை நான் அப்பாவினரை காருக்குள்ளையே வைச்சிட்டன்" என்றாள் ஆரபி.

வனஜா செய்வதறியாது ஒன்றும் சொல்லாமல் நின்றாள்.

***ஒன்றுக்கு பத்துமுறை யோசிக்க....***




***கலைக்கதிர். கதிர். துரைசிங்கம்.***

1. உங்கள் உடலில் நோய் எதிர்க்கும் சக்தியை உயர்த்தும்

2. உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்கும்.

3. வலியைத் தாங்கும் சக்தியை அதிகரிக்கும்

4. சந்தோஷத்திற்கும், சிந்தனைக்கும் ஏதுவாக இருக்கும் மூளையின் பகுதியைத் தூண்டிவிடும்.

5. இலகுவானது. வசதியானது எப்பபோதும் எங்கும் செய்யலாம்.

6. சுகாதரக் காப்புறுதி (Health Insurance) வைத்திருக்கத் தேவை இல்லை.

7. செலவு அற்றது. முதலீடு மனம் மட்டுமே!

8. செய்வதற்கு எந்த வித உபகரணமும் தேவை இல்லை.

9. மாத்திரை போடவோ, உடலை வளைக்கவோ அவசியம் இல்லை. ஆனால் நோய்கள் பலவற்றிற்கும் நிவாரணம் அளிக்கும்.

10. நேர ஒதுக்கீடு வைக்கத் தேவை இல்லை.

# தமிழோடு இசைபாட மறந்தறியேன்

## இறைவன் ஒரு மொழிக்குத் தான் உரியனல்லன்
## தமிழ் மொழியிற் பூசை வேண்டும்

**ஆ. சி. நடராஜா (முன்னால் அதிபர் வயாவிளான் ம.ம.வி)**

நவீன தொழில் நுட்ப வளர்ச்சிப்போக்கு உலக மொழிகள் பலவற்றையும் விரைவில் அழியச் செய்து விடும். எமது தமிழ் மொழி இன்னும் நூறு ஆண்டுகள் நிலை பெறுமா என்பது சந்தேகமே எனச் சில ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

எனவே, தமிழ் மொழி நீண்டு நிலைத்து வாழ வேண்டுமென்று ஆசைப் படுபவர்கள் எந்த அளவுக்கு எங்கெல்லாம் தமிழைப் பயன்படுத்த முடியுமோ, அங்கெல்லாம் அதனைப்பிரயோகிக்க வேண்டுமென்று எண்ணுகின்றனர்.

எமது நாட்டைப் பொறுத்த வரையில் சிங்கள பேரினவாதம் தமிழ் மொழியை ஒழித்துக் கட்டும் நடவடிக்கையில், சிங்களம் மட்டும் சட்டத்தினை 1956 இல் முடுக்கிவிட்டது. அதன் விளைவாக எமது மொழி உரிமைக்காக நீண்ட நெடிய போராட்டம் ஒன்றை அன்றிலிருந்து இன்று வரை பேரிழப்புக்களுடன் எமது இனம் நடாத்தி வருகின்றது. இதனால் ஏற்பட்ட விழிப்புணர்வாக எமது தாய் மொழிக் கையாளுகை புத்துணர்வுடன் வேகம் பெற்று வருகின்றது. மொழி அபிமானிகள் புதிய புதிய தூய தமிழ்ச் சொல் உருவாக்கங்களைச் செய்து வருகின்றனர்.
இச்சூழலிற் கூட எமது வழிபாட்டுக்குரிய மொழியாகத் தமிழ் மொழியைப் பிரயோகிக்க நாம் பின்னிற்கின்றோம்.


பேச்சு வழக்கிலிருந்து இறந்தொழிந்து போன சமஸ்கிருத மொழியொன்று மட்டுமே இறைவனுக்குப் புரியும் என்ற ஒரு மாயையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சமஸ்கிருதந்தான் இறைவனுக்கு இனிக்கும் மொழி என்றால் பேச்சு வழக்கிலிருந்து அது ஒழிந்து போயிருக்க முடியாதே சிந்திக்க யாரிருக்கின்றனர்?

“தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்களுக்கும் இறைவன்” என்று முழங்குகிறோம். ஆனால் உலக நாடுகளில் பேசப்படுகின்ற மொழிகள் எம் இறைவனுக்குப் புரியாது என்றும் நாமே அல்லவா கூறுகிறோம். அது எமது சைவ சமயத்தை வளர்த்த சான்றோர்களது சொற்பாடுகளுக்கு எதிரானதாகவல்லவா இருக்கின்றது. திருஞானசம்பந்தர் ஒரு பிராமணர். அவர் சமஸ்கிருத மொழியிற் தனது இறையுணர்வை எங்காவது கூறிவைத்ததாகத் தெரியவில்லை. உமையம்மையின் திருமுலைப்பாலை உண்ட அந்த ஞானக் குழந்தை “தோடுடைய செவியன்” என்று தான் திருவாய் மலர்ந்தது. இறைவனுக்கு சமஸ்கிருதம்தான் விருப்புடைத்தென்றால் நிலமை வேறாகியிருக்கும். திருமுலைப் பால் தமிழறிவையே தந்தது.

தொடர்ச்சி 21ம் பக்கம்...

**சிவத்தமிழ் நடத்திய சைவசமய அறிவுப்போட்டி -2011- பரிசு பெற்ற மாணவர்கள்**






# தாயுமானவரின் பரிபூரணானந்தத்தில் பிரபஞ்சக்கோட்பாடு

( ஆய்வு : முனைவர் ச.சந்திரா -தமிழ்நாடு)

**முகவுரை :** அண்டத்தின்கண்ஞானிகள் பலர் அவதரித்து நல்மார்க்கங்களைப் போதித்துச் சென்றிருக்கின்றனர். அவர்களுள் ஒருவரே பிரபஞ்சத்தத்துவத்தை ஆன்மீகத்தின் வழி தெளிவுறச் செய்த ஞானபண்டிதரான தாயுமான சுவாமிகள்ஆவார்.

ஆன்மீக உணர்வை வெகுவாக விரவிக் கலக்காமல், அறிவாற்றலின் அடிப்படை யில் படைக்கப்பட்ட நூலே பரிபூரணானந்தம் ஆகும். பிரபஞ்சக்கோட்பாடு தாயுமானவரால் விரித் துரைக்கப்படும்தன்மையை ஆய்வுக் கட்டுரை பகர்கின்றது.

**பிரபஞ்சக்கோட்பாடு :**

இயற்கையின் கூறுகளான நிலம் ,நீர் ,தீ ,காற்று ,ஆகாயம் ஐந்திற்கும் அப்பால் அவற்றை ஆட்டுவிக்கும் ஒன்றேகடவுள்.

இந்தக்கொள்கைக்கு நிலைக்களனாக அமைவது பிரபஞ்சமும் அதில்வசிக்கும் ஜீவன்களும் ஆகும். உயிர்வாழ் ஜீவன்களும் பிரபஞ்சமும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது. பிரபஞ்சம்பல்வேறு நட்சத்திரக் குடும்பங்களாக இருப்பினும் அதன்தலைமையான சூரியன் தனித்தியங்குவதோடு மட்டுமல்லாமல், இதர கோள்களுடனும் இணைந்து இயங்கிவருகிறது. இதைப்போலவே மனிதனும் தனித்தும் கூட்டாகவும் இயங்கிவருகின்றான்.

பிரபஞ்சம்-மனிதகுலஒற்றுமைச்செயல்பாடு இவ்விதமாய் தாயுமானவரால் உணர்த்தப் படுகிறது.

ஆத்மசொரூபமும்பிரகாசமும்:

ஆழியிலிருந்து, நீர்கண்ணுக்கு தெரியாத நிலையில் ஆவியாகி, பின்மேகமாக உருமாறு கின்றது. பகலில் சூரியனையும் இரவில் சந்திரன் மற்றும் நட்சத்திரங்களையும் மறைத்து விடுகிற இயல்பு அந்தமேகத்திற்கு வந்துவிடுகின்றது. நீர்தூய ஆவியாக இருந்த வேளையில் சூரியசந்திரரை மறைக்கவில்லை. மேகமாக உருவெடுத்த போதுதான் பிரகாசம் நிறைந்த கோள்களை யெல்லாம் மறைக் கின்றது.

இந்தமேகத்திற்கு ஒப்பானதுதான் விருப்பு, வெறுப்பு மிகுந்தமானிடமனம்.

ஆத்மசொரூபத்தில்தோன்றுகின்ற இம்மனித மனம் ஆத்மபிரகசத்தை அழித்துவிடுகின்றது. மனிதமனத்தையும் பிரபஞ்சத்தையும் ஒப்பிட்டு "மனதற்ற பரிசுத்தநிலையை அருள்வாய்" (பரி.10: 7) என்று பாடுகின்றார் தாயுமானவர். பஞ்சபூதங்களுள் ஒன்றான ஆகாயத்தையும் மனித ஜீவனையும் ஒப்பிட்டு இக்கருத்து அமைந்துள்ளது.

வெப்பமும் வேதனையும் :

உயிர் வாழ்ஜீவன்களுக்கு வெப்பம் இன்றியமையாதது என்பது வெளிப்படை.

உயிரை ஓம்புதலும் உடல் வெப்பத்தைக் காத்தலும் இணைபிரியாஒன்றாகவே இருந்து வருகின்றது. மிகைப்பட்ட வெப்பம் காய்ச்சலாக உருமாறி மனிதஉயிரையே போக்கிவிடும்.

அதுபோலவே மிகைப்பட்ட ஆசைகளை மானிடர் கொள்ளின் வெப்ப நோயைப்பொல அவை பொருந்தாததாகி அவனைச் சீரழித்து விடும்.

இதனையே " ஆசைக்கோர்அளவில்லை"" (பரி.10:1) எனதாயுமானவர் உரைக்கின்றார். பஞ்சபூதங்களுள் ஒன்றான நெருப்பையும் மனிதனையும் இணைத்து இக்கருத்து சொல்லப் பட்டிருக்கின்றது.


வளர்ச்சியும் ஒடுக்கமும்:
உலகச் செயல்பாடுகள் அனைத்தும் ஆதர்ஷண சக்தியே! இப்பிரபஞ்சத்தில் வீசுகின்ற காற்றானது நெருப்பை வளர்க் கின்றது ஒடுக்கவும் செய்கின்றது.
பிரபஞ்சத்தில் வசிக்கும் ஜீவன்களும் . ஜடப் பொருட்களும் இயங்குவதும் ஒடுங்குவதும் கடவுளின் செயல்பாட்டினாலேயாகும்.
உயிர்கள் அறிந்து செய்கின்ற செயலும் ,அறியாமல் செய்கின்ற செயலும் முறையே வளர்ச்சிக்கும், ஒடுக்கத்திற்கும் காரணமாக அமைகின்றது. இதனையே 'சந்ததமும் எனது செயல்' (பரி .5:1 ) என்று பாடுகின்றார் தாயுமானவர். இதில் பஞ்ச பூதங்களுள் ஒன்றான காற்றையும் மனித செயல் பாடுகளையும் ஒப்புமைப்படுத்தி தாயுமானவர் உரைக்கின்றார்.
இயற்கையும் ஓசையும்:

இயற்கையினின்று இடைவிடாது ஓசை உருவாகிக் கொண்டேயிருக்கின்றது. ஓயாமல் இயங்குவதற்கே இயற்கை எனப் பெயர். ஓசையும் இயற்கையும் ஒருபொழுதும் பிரிக்க இயலாத அளவிற்கு ஒற்றுமையினை யுடையவை. பிரபஞ்சம் முழுமைக்கும் அடிப்படையாய் இருக்கின்ற ஓசைக்கு " நாதப் பிரம்மம் " என்ற பெயருள்ளது. ஜடப் பொருட்கள் எல்லாம் சப்த சொரூபமே ! மனித ஜீவன்களின் செயல்பாடுகள் அனைத்தும் ஓசையுடனே நடக்கின்றன. உயிர்வாழ் மனித ஜீவன்கள் " தெய்வ நாமா " போன்ற நாதங்களை உச்சரித்து அவரவர் ஆத்ம சொரூபங்களை புதுப்பித்துக் கொள்கின்றனர். இதனையே தாயுமானவர் " நாதவடிவென்பர் " ( பரி.6:3 ) என்கின்றார்.

இதில் பஞ்ச பூதங்களுள் ஒன்றான நிலத்தையும் ஜீவன் களையும் இயைபுப் படுத்திக் கூறுகின்றார் தாயுமானவர்.

சிற்றலையும் பேரலையும் :

பிரபஞ்சத்தின் மேற்பரப்பில் நிலத்தைவிட நீர் மிகுதியாக உள்ளது. மேலும் அதிஆழமான பகுதியும் நீரிலுண்டு. இந்த விரிந்த நீர்ப்பரப்பு பேரலையாக உருவெடுத்து நிலத்தின்மீது, நெடுந் தூரத்திலிருந்து பயணிக்கத் தொடங்கி நிலத்தின்மீது வந்து விளையாட இயலும். ஆயினும் அது பேரலையாக உருவெடுத்தும் சிரமம் அளிக்காது சிற்றலையாக கரையோடு விளையாடிக் கொண்டிருக்கின்றது. இறைவனும்



இதைப்போல் ஆத்ம பக்தர்களுடன் சிறு சிறுவிளையாடல்களை வைத்துக் கொள் கின்றான். இதனையே தாயுமானவர் "ஆழாழி கரையின்றி நிற்கவில்லையோ ? " ( பரி.9˙ 1 ) என வினவுகின்றார்.
இதில் பஞ்சபூதங்களுள் ஒன்றான நீரையும் மனிதகுலத்தையும் இணைத்துப் பாடுகின்றார் தாயுமானவர்.
ஜனனமும் மரணமும்:
பிரபஞ்ச நிகழ்வை "ஒரு நாள் " என்று குறிக்கின்ற வேளையில் அதில் பகலும் இரவும் அடங்கியிருக்கின்றன. அதேபோல் மனித உயிர்களின் "ஜென்மம்" என்று சொல்லுகின்ற வேளையில் அதில் ஜனனமும் மரணமும் அடங்கிக் கிடக்கின்றன. எந்த ஜீவன் கர்மம் செய்யாமல் வாழ்வை நடத்துகின்றதோ அதற்கு அடுத்த ஜென்மம் என்பதில்லை.எந்த ஜீவனுக்கு "கர்மா" இருக்கிறதோ அதற்கு ஜனன மரணம் இடைவிடாது நிகழ்ந்து கொண்டேயிருக்கும்.இந்நிகழ்வு பகல்-இரவு மாறி மாறி தொடர்வதைப் போன்றது என்கிறார் தாயுமானவர். இதையே "தொடு வழக்காய் ஜென்மம் வருமோ" ( பரி .5 ˙-6 ) என்னும் அடிகள் உணர்த்துகின்றன.

இதில் பிரபஞ்சத்தின் தொடர் நிகழ்வும் மனித வாழ்வின் இருவேறு பெரு நிலைகளும் இணைத்துப் பேசப்படுகின்றது.
அண்டமும் பகிரண்டமும் :

நமக்கு கட்புலனாகும் சூரியன் ,சந்திரன் ,பூமி போன்ற இயற்கை உருவாக்கங்கள் அகன்று பரந்து விரிந்துள்ளன. ஓர் உள்ளங்கை அளவு நீர் போன்றது பிரபஞ்சம். நம் அறிவுக்கு எட்டாத பகுதி கடல்நீர் அளவானதாகும். உள்ளங்கை நீரைத் தெரிந்து கொண்டால் கடல்நீர் முழுமையும் தெரிந்து கொண்டதற்கு ஒப்பானதாகும்.
தொடர்..19ம் பக்கம்















## சிவத்தமிழ் சஞ்சிகையின் 7 வது ஆண்டு நிறைவு விழா

யேர்மனியில் இருந்து கடந்த 7 ஆண்டுகளாக வெளிவரும் சிவத்தமிழ் சஞ்சிகையின் சிவத்தமிழ் விழா கடந்த 07.05.2011 யேர்மனியில் பீலபெல்ட் நகரில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

விழா தேவாரத்துடன் ஆரம்பமானது. மங்கல விளக்கினை திருமதி.வி.கந்தவனம். திருமதி.ஜெயமாலா. சக்திவேல், திரு கிறேசியன் யேம்ஸ் அல்ஸ்ரன்,திருமதி தயாநிதி தயாபரன்,திருமதி அஜந்தா ஈஸ்வரன்,திருமதி மோகனராணி சிவகரன்,திருமதி நடனகலா விவேகானந்தர்.ஆகியோர் ஏற்றி வைத்தனர். அதனைத் தொடர்ந்து மங்கல வாத்திய இசையாக நாதஸ்வரக் கச்சேரி இடம் பெற்றது.

வரவேற்புரை திரு கிறேசியன் யேம்ஸ் அல்ஸ்ரன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

விழாவின் சிறப்பு விருந்தினராக கவிஞர்.வி.கந்தவனம் அவர்கள் (கனடா) கலந்து சிறப்பித்தார். ஆண்டு தோறும் சிவத்தமிழ் சஞ்சிகையால் நடத்தப்படும் யேர்மனிதழுவிய சைவ சமய அறிவுப்போட்டி இம்முறை ஒரு நகரத்தை மையப்படுத்தி அங்குள்ள தமிழ்பாடசாலை மாணவர் மத்தியில் நடத்தப்பட்டது. இந்த நடைமுறையே எதிர்காலத்திலும் தொடரவுள்ளது. யேர்மனியில் பலபாகங்களிலும் தமிழர் வாழும் பகுதிகளில் சிவத்தமிழ் விழாவும் சைவ சமய அறிவுப்போட்டிகளும் நடைபெறும்.

கலை நிகழ்ச்சிகளாக பரதநாட்டியம், யேர்மனியில் அண்மையில் வெள்ளிவிழாக்கண்ட வானதி வாணி நர்த்தனாலய மாணவிகள் வழங்கி சிறப்பித்தனர். தொடர்ந்து பீலபெல்ட் தமிழ்பாடசாலையின் 30 மாணவர்கள் பங்குகொண்ட "கந்தன் கருணை" என்னும் நாடகம் அரங்கேறி சிறவர்களையம் பெரியவர்களையும்,பக்தி பரவசத்தில் ஆழ்த்தியது.

சைவ சமய அறிவுப்போட்டி அமைப்பாளராக திருமதி.நிர்மலா.வரதன் அவர்கள் பணியாற்றினார். ஆறு பிரிவாக மாணவர்களிடையே நேரடியாக நடத்தப்பட்ட போட்டியில் ஒவ்வொரு பிரிவுகளிலும் முதலிடம் பெற்றவர்களுக்கு தங்கப்பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெற்றவர்களுக்கு புத்தகங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. அத்துடன் போட்டியில் கலந்து சிறப்பித்த அத்தனைமாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

பிரதம விரந்தினர் கவிஞர்.வி.கந்தவனம் அவர்கள் மாணவர்கள் மத்தியில் குறிப்பாக இளைய சந்ததியினர்களிடம் சைவ சமயத்தின் தத்துவங்களையும்,தமிழின் சிறப்பையும் நாம் எடுத்துச் சொல்லவேண்டும் என்றார். அதற்கு சிவத்தமிழ் சஞ்சிகையின் பணி சிறப்பாக உள்ளது. இவ்வளவு திரளாக மாணவமணிகள் கலந்து சிறப்பிக்கும் சிவத்தமிழ் விழா வெற்றிமணிக்கும் சிவத்தமிழுக்கும் பெருமையளிப்பதாக உள்ளது என்றார். மாணவர்களது நடகம் அவர்களது ஒப்பனை தன்னை மிகவும் கவர்ந்தது என்றார்.

சிவத்தமிழ் சஞ்சிகை கவிஞர் கந்தவனம் அவர்களின் வெளியீட்டு உரையுடனும் டோட்மூண்ட் ஸ்ரீ சாந்தநாயகி சமேத சந்திர மௌலீஸ்வர ஆலய குரு. சைவாகம சாதக குருமணி சாமி.தெய்வேந்திரகுருக்கள் அவர்களின் ஆசியுரையுடனும் வெளியீடு செய்து வைக்கப்பட்டது. பிரதம விருந்தினர் சிவத்தமிழ் சஞ்சிகையை சிறப்புற நடத்திவரும் வெற்றிமணி சிவத்தமிழ் பிரதம ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரனைப் பாராட்டி கௌரவித்தார். நிகழ்சிகளை "பல்கலைவாணி" செல்வி ஷரீகா.சிவநாதன் சிறப்புறத் தொகுத்து வழங்கினர். படங்கள்: அ.சிவரூபன்

**17ம் பக்கத் தொடர்ச்சி**

அதேபோல் பிரபஞ்சத்திற்கு கட்புலனாகும் பகுதியெல்லாம் தெரிந்து கொண்டால், நமக்கு கட்புலனாகாத பெருந்தொகுதி பற்றி அறிந்து கொள்ள இயலும். பிரபஞ்சத்தின் தொகைக்கு "அண்டம்" என்று பெயர். இதற்கு அப்பாலிருக் கின்ற அனந்தகோடி பகுதிகள் கணக்கிட இயலா நிலையில் உள்ளன. இவற்றிற்கு "பகிரண்டம் " எனப் பெயர். இவையனைத்தும் மாயா விகாரமே என்பதனையே "அண்ட பகிரண்டமும் மாயா விகாரமே " (பரி.41 ) என்னும் அடி விளக்குகின்றது. ஒரு சிலவற்றை தெரிந்து கொள்வதன் மூலம் மனித குலம் பலவற்றை அறிய இயலும் என்பதனை பிரபஞ் சத்தோடு ஒப்புமைப் படுத்திப் பாடியுள்ளார் தாயுமானவர்.

ஸ்தூலமும் சூட்சுமமும்:

பிரபஞ்சத்திலிருக்கும் ஐம்பூதங்களும் ஒன்று மற்றொன்றை பரிணமிக்கவல்லது. அவ்விதம் பரிணமித்தபின் மீண்டும் தன் முந்திய நிலைக்கு ஒடுங்கிப் போவதுண்டு. பூதங்களுள் மிக சூட்சுமமமான ஆகாயவெளி எங்கும் வியாபகமாயிருக்கின்றது. அந்த வெளி யிலிருந்து வாயு உருவாகின்றது. நெருப்பானது வாயுவிலிருந்து வருகின்றது. நீர் உண்டாக நெருப்பு துணையாகின்றது. இவையனைத்தும் நிலத்திலே நிகழ்கின்றது. சூரியனிடத்திலிருந்து சிதறிய பூமி நீராகவும், நிலமாகவும் அமைகின்றது. அது விரிந்தபின் வெப்பத்தில் ஒடுங்குகின்றது.

வெப்பம் காற்றில் ஒடுங்குகின்றது. காற்று வெட்டவெளியில் மறைகின்றது. ஸ்தூலமா யிருக்கும் பூதம் இவ்வாறு சூட்சுமமாக மாறுகின்றது. மனித வாழ்வும் இது போன்றது தான். நிலையானது என்று எண்ணுகின்ற மனித வாழ்க்கை நிலையற்றதாக மாறிவிடுகின்றது. இதனையே தாயுமானவர் "புகலவுமாகின்ற மாயை " (பரி.6 1 ) எனக்கூறுகின்றார்.

ஐம்பூதங்கள் ஒன்றுக்குள் ஒன்று அடங்கி ஒடுங்குவது போல்தான் மனித வாழ்வும் அடங்கியொடுங்கும் என்ற கருத்தே இதன்வழி உரைக்கப்பட்டுள்ளது.

ஜீவாத்மாவும் பரமாத்மாவும்:

பஞ்சபூதங்கள் பரம்பொருளிடத்து தோன்றி வந்தவைகளே ! ஜீவன் தன்னை , அறிவுப் பொருளாக உணர அவனுடைய அறிவுக்கு மூலமாயிருப்பது பரம்பொருளின் பேரறிவாகும். ஒருயிர் மற்றோர் உயிருக்கு அந்நியமானது என மனிதன் எண்ணுகின்றான். அந்த எண்ணத்திற்கு மாறாக "எந்த நிலையிலும் ஜீவன் பரமாத்மாவிற்கு அந்நியமானவன் அல்லன் " என்பது குறித்தே தாயுமானவரின் பரிபூரணாந்தத்தில் சொல்லப்பட்டுள்ளது. தாயுமானவர் தான் சொல்லவந்த கருத்தை பிரபஞ்சத்தோடு ஒப்பிட்டு சொன்ன தன்மை சிறப்புடையதாகும். "யான் எனும் தன்மை நின்னையன்றி இல்லாத தன்மையால் வேறு அல்லேன். " (பரி.51-2) என்னும் அடிகள் மேற்குறிப்பிட்டனவற்றை விளக்குகின்றன.


**நிறைவுரை :**

பிரபஞ்சம் எவ்விதமாக சமநிலையில் இயங்கி ஒன்றுக்கொன்று மாறுபடாமல் எப்பொழுதும் செயல்பாட்டு நிலையில் உலகை இயக்கு கின்றதோ, அதுபோல் மானிட ஜீவன்கள் வாழ்வில் நேரிடும் இன்பதுன்பங்களை ஒன்றாக பாவித்து சமமாக வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். பிரபஞ்சத்தையும் மனிதகுல வாழ்வையும் ஒப்பிட்டு பரிபூரணானந்தத்தை அருளிய தாயுமான சுவாமிகளின் மார்க்கத்தை பின்பற்றிச் செல்லும் வேளையில் நம்மோடு நம் சார்ந்தோரும் நலம் பெறுவர் என்பதில் ஏதேனும் ஐயமுண்டோ ?

திருச்சிற்றம்பலம்



# திருமூலர் சொல்லும் பிறப்பின் இரகசியம்!



திருமூலர் மனித இனப் பெருக்கம் பற்றி எடுத்துக் கூறுகிறார்.

கனக்ஸ் கனடா

பூவுடன் மொட்டுப் பொருந்த அலர்ந்தபின்
காவுடைத் தீபம் கலந்து பிறந்திடும்
நீரிடை நின்ற குமிழ் நிழலதயாய்ப்
பாருடல் எங்கும் பரந்தெட்டும் பற்றுமே - (472)

இது திருமந்திரத்தில் உள்ள கர்ப்பக்கிரிகையின் 472 பாடல். பாடலின் முதற்பகுதி புணர்ச்சியுடனும் கருக் கட்டலுடனும் சம்பந்தப்பட்டது. ( பூவுடன் மொட்டுப் பொருந்த அலர்ந்தபின் காவுடைத் தீபம் கலந்து பிறந்திடும்). இதற்கான விளக்கத்தினைத் தரத் தேவையில்லை. அடுத்த இரண்டு அடிகள் பற்றியுமே நான் சிந்தித்தேன்.

காவுடைத் தீபம் கலந்து பிறந்திடும் என்ற இரண்டாவது அடி கருக்கடல் பற்றிக் கூறுகிறது.

கருக்கட்டலின் விளைவாக நுகம் (Zygote) தோன்றுகிறது. அந்த நுகம் மேற்கொண்டு விருத்தி யுறுகிறது. அப்பொழுது கருக்கட்டிய முட்டை தொடர்ச்சியாகப் பிரிந்து இரண்டு , நான்கு எட்டு என எண்ணிக்கையில் அதிகரித்து ஒரு அரும்பர் சிறைப்பை ( Blastocyst) ஆகின்றது. இதிலிருந்து தான் முளையம் ( embryo) தோன்றி பின்னர் சிசுவாகி ( fetus) இறுதியில் குழந்தையாக ( child) ஜெனிக்கின்றது.

இங்கே உயிர் எப்போது தோன்றுகிறது என்ற வினா யாருக்கும் எழவே செய்யும். அருமையான விளக்கம் மூன்றாவது அடியினில் இருப்பதைக் காண முடியும். நீரின் பரப்பிலே நீர்க்குமிழி காணப்படுகிறது. அதன் நிழல் நீரிலே கலந்தபடியே காணப்படுகிறது.

விந்திற்கு உயிர் உள்ளதா? உள்ளது என்றே சொல்ல வேண்டும். நிச்சயமாக உள்ளது.

உயிரிகளுக்குள்ள குண இயல்புகளில் ஒன்றான அசைவு அதில் உள்ளதே! ஒரே சமயத்தில் வெளியேற்றப்படும் அத்தனை ஆயிரம் விந்துவுக்கு மிடையே ஒரு ஓட்டப் போட்டி நடைபெறுகிறதே. ஆனால் முட்டையின் பரப்பினைத் தொடாவிட்டால் அது போன இடமே தெயாமல் போய்விடும்!

முட்டைக்கு உயிர் உள்ளதா? முட்டைக்கு உயிர் உள்ளதா? உள்ளது. விந்துவை தன்னை நோக்க வா என அழைக்கிறது அல்லவா? ஆனால் 24 மணித்தியால அவகாசம். அதற்குள் இரண்டும் சங்கமிக்காவிடட்டால் முட்டை பூச்சியமாகிவிடும். அவை இரண்டாலும் தனித்து வாழ முடியாது. அவை இரண்டும் சேர்கின்ற பொழுது தான் நிலையாய உயிர் தோன்றுகின்றது. இதனையே 'காவுடைத் தீபம் கலந்து பிறந்திடும்' எனும் அடி விளக்குகின்றது.

அப்படித் தோன்றுவது தான் நுகம். இதனைத் திருமந்திரத்திற்கு விளக்கம் தந்தவர்கள் சீவ அணு என்பார்கள்

நுகத்தின் விருத்தியின் போது அது தொடர்ச் சியாகப் பிரியுமென்றோம். அப்படி என்றால் நுகத்திலே காணப்பட்ட உயிருக்கு என்ன நடக்கிறது? ஒவ்வொரு கலத்திலும் உயிர் உள்ளது. 'நீரிடை நின்ற குமிழி நிழலதாய் பாருடல் எங்கும் பரந்தெட்டும் பற்றுமே' என்கிறது திருமந்திரம். நீரில் உள்ள குமிழியின் நிழலானது நீரோடு கலந்து வேறாகாதது போன்று உயிரானது சீவ அணுவினது உடலெங்கும் கலந்து விடும் என்பது இதற்குக் கொடுக்கப் படும் விளக்கம். உயரினைக் கூறு போடுவதாக இல்லை. அது எங்குமே பரந்து விடும். ஆகவே நுகம் எத்தனை முறை பிரந்தாலும் உயிர் அத்தனைக்கும் சென்று விடும்.

மனித முட்டையினை முளையவியலறிஞர்கள் சீராக்கல் முட்டை (regulative egg) என்பார்களஎ. அதாவது அந்த முட்டைக்கு இழப்பினை ஈடு செய்யும் தன்மை உள்ளது என்பார்கள்.

முட்டையினது ஒரு பகுதியை எடுத்து விட்டாலும் அந்தப் பகுதி ஈடுசெய்யப் பட்டு விடும். அந்த முடடையிலிருந்து தோன்றும் முளையமோ, சிசுவோ எவ்விதமான குறைபாடும் அற்றதாகப் பிறக்குமாம். இதனால்த் தான் மனித இனத்திலே ஒத்த இணைகள் ( Identical twins) தோன்ற முடிகிறது. கருக்கட்டிய நுகம் இரண்டு கலங்களாகப் பிரிகின்ற போது அந்த இரண்டு கலங்களும் ஒன்றிலிருந்து மற்றையது முற்றாகவே பிரிந்து விட்டால் இரண்டு ஒத்த இணைகள் தோன்ற முடியும். இங்கே இரண்டு கலங்களும் தாம் இழந்த மறு பாதியை ஈடு செய்துள்ளன என்பதனை அறிய முடிகிறது.அதே போன்று நான்கு கலப் பருவத்திலோ எட்டுக்கலப் பருவத்திலோ தோன்றுகின்ற கலங்கள் ஒன்றினை விட்டு ஒன்று முற்றாகவே விலகினால் அவை ஒவ்வொன்றுமே இழப்பினை ஈடு செய்து குறையில்லாத சிசுக்களை ( Multiple pregnancy) உருவாக்க முடியும். மனித முட்டைக்குத் தான் இத்தகைய சிறப்பு உண்டு. திருமந்திரத்தின் மூன்றாவது அடியினை உற்று நோக்குவாமாயின் அதில் இதற்கான விளக்கம் பொதிந்திருப்தைக் கண்டு கொள்ள முடியும்.

தவளை ஒன்றினது முட்டை கருக்கட்டி விருத்தி நடைபெறுகையில் அதன் ஒரு சிறு பகுதியாவது இழககப் பட்டால் விருத்தியுறுகின்ற முளையம் முழுமையானதாக அமையாது. இழப்பினை ஈடு செய்யும் தகமை அதற்கில்லை. தவளை முட்டையை இதனால் சித்திர வடிவு முட்டை (ஆழளயைஉ நபப) என்கிறார்கள்.அதன் விருத்தி ஏற்கனவே தீர்மானிக்கப் பட்டபடியே ( determinate development) நடைபெறும்.

திருமூலர் மனித இனப் பெருக்கம் பற்றியே எடுத்துக் கூறுகிறார்.

**தமிழோடு இசைபாட மறந்தறியோன்... 15ம் பக்கத் தொடர்ச்சி.**

புறச் சமயங்களின் ஆதிக்கத்தைத்தகர்த்து அகச் சமயங்களை நிலை நிறுத்தப் புரட்சி செய்த அப்பரும், சம்பந்தரும் மற்றும் சுந்தரரும், மாணிக்கவாசகரும் பக்திப் பரவசத்தால் பண்ணிசைத்துப் பாடிய மதுர கீதங்கள் எல்லாம் தமிழ் மொழியிலல்லாவ மேற்கிளர்ந்தன. "நாளும் இன்னிசையால் தமிழ் பரீப்பும் ஞானசம்பந்தனும்", "தமிழோடு இசைபாட மறந்தறியாத அப்பரும்" இவ்வரிய தமிழிசையால் சுவர்க்கப் பேறு எய்தினர் என்பதை யாரால் மறுக்க முடியம்?

மதமாற்றங்கள் இன்று நடை பெறுவதற்கு, எமது சைவ ஆலயங்களில் மக்களுக்குப் புரியாத மொழியிற் பூசைகள், கிரியைகள் நடைபெறுவதும் ஒரு காரணம் என்று யார் சிந்திக்கப்போகிறார்கள்? யார் ஏற்கப் போகிறார்கள்?

"இன்றைய சமூகத்தில் மத நம்பிக்கை குறைந்து வருகிறது. இதனாற் சமூக ஒழுக்கக்கேடுகள் பெருகிவருகின்றன" என்ற குரல்கள் ஓங்கி ஒலிக்கின்றன. இறை யுணர்வை மிகுவிக்கக்கூடிய வகையில் எமது மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய முறையில் பூசைகள், கிரியைகள் நடை பெறாமை மதப் பற்றிலிருந்து அவர்கள் விலகிச் செல்ல ஒரு காரணமாக இருக்கிறது என்பதை யார் எமது மண்ணில் உணரப் போகிறார்கள்?

ஆலயங்களிலே ஒலிபெருக்கிகளைப் பூட்டிப் புரியாத மொழியில் பூசை மந்திரங்களைப் பேரொலியாக்கி இரைச்சலை ஏற்படுத்தும் காலமிது. இது எருமை மாட்டில் நீர்த்திவலைவிழுந்தது போல, புறக்குடத்தில் நீரூற்றியது போல இல்லவா நடந்தேறு கின்றது என்று யார் நினைக்கப் போகின்றார்கள்? இந்தப் பேரிரைச்சல்கள் எமது மக்கள் மத்தியில் எப்படியான பயபக்தியையும் நல்லொழுக்கப் போதனை களையும் ஏற்படுத்துகின்றன? என்று யார் சிந்திக்கிறார்கள்? சமூகத்தில் ஒழுக்கம் கெட்டுவருகிறது என்று கவலைப்படும் சமயச் சான்றோர்கள் இவ்விடயம் பற்றி சிந்திக்க வேண்டும். "மந்திரத்தை உச்சரிப் பவப்களுக்கே அதன் உண்மைப் பொருள் விளங்குமா" என்பது சந்தேகமே என்று கூறுபவர்களையும் காணுகிறோம்.

வரலாற்றுப் பாதையில் மிக நீண்ட காலம் சமஸ்கிருதத்தில் பூசைகள் நடைபெற்று வந்தது உண்மை அதே நேரத்தில் ஓதுவார் மூர்த்திகள் மூலம் தேவார, திருவாசகங்கள் பஜனைகள் ஆலயங்களில் ஒலித்து வந்தன. மக்கள் மனதில் இவை இறையுணர்வை ஓரளவுக்கு நிலை நிறுத்தி வந்தன ஆனால் இன்று எத்தனை ஆலயங்களில் இஞ்ஞானத் தமிழிசைக்கு முதன்மை வழங்கப் பட்டுள்ளது? எத்தனை பேர் பக்திச் சுவை நனிசொட்டச் சொட்ட இப் பக்திக் கருவூலங்களை இசைக்கும் வல்லமை பெற்றிருக்கிறார்கள்? "ஒருதேவாரம் பாடு" என்றால் திரும்பி ஓடுபவர்கள் தொகை தான் இன்று ஏராளம்.

இன்றைய நிலையில் ஆலயங்களில் தமிழ் மொழியின் பயன்பாடு எமது மொழிப் பாதுகாப் புக்கும் சைவ சமய மறுமலர்ச்சிக்கும் மிகமிக இன்றியமையாத தென்பது எமது கருத்தாகும். இது இன்றைய காலத்தினது தேவையுமாகும். இப்படியான சிந்தனையை முன்வைத்து வந்த முன்னோர்கள் பலபேர் அதனை ஏற்றுக் கொண்டிருந்தால் நிலமை இன்று வேறாக இருந்திருக்கும்.

மிக நீண்ட காலம் இருந்துவந்த ...மானிய முறைச் சமூகத்திற்கு கல்வி என்பது வெகு சிலரால் அறியப்பட்ட ஒன்றாக இருந்தது. அறியமையி லிருந்து குடிமக்கள் சுயசிந்தனைக்கு இடமின்றி கைதட்டி வாய்பொத்தி வாழ்ந்து வந்த போது ஆலய அனுட்டானங்கள், வழிபாடுகளையும் புரியாப் புதிராக ஏற்று வந்தனர் என்று கொள்வதிற் தவறவில்லை.

கல்வி அறிவு விருத்தியடைந்து ஏற்பட்ட பகுத்தறிவு வளர்ச்சியால் எத்தனையோ விடயங்கள் சிறுமையானவை என்பது உணரப் பட்டுக் கைவிடப்பட்டு வருகின்றன. ஆலயச் செயற்பாடுகள் கூட இதற்கு விதிவலக்கல்ல இங்கு விழாக் கட்டமைப்புகள், வர்ணாச்சிரம தர்மங்கள் போன்றவற்றில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை இங்கு குறிப்பிடலாம். அதேபோலப் பூசைகளும் தமிழ்மொழி மூலம் நடந்தாக வேண்டியது இன்றியமையாததாக உள்ளது.


ஐந்து, ஆறு வயதுப்பிள்ளை கூட ஏன், எதற்கு என்று கேள்வி எழுப்பிச் சிந்திக்கக் கூடிய மாற்றங்கள் எல்லாத் துறைகளிலும் எல்லா நிலைகளிலும் எற்பட்டேயாக வேண்டும்.

எமது மண்ணின் சைவத் தமிழ் அபிமானிகள் இவ்விடயத்தில் தீர்க்கமான நடவடிக்கைகளை முன்னெடுப்பார்கள் என எதிர்பார்ப்போம்.

# ஆதிசங்கரர் காலமும் காஞ்சி சங்கராச்சார்ய திருமட வரலாறும்

## ஒரு வித்தியாசமான பார்வை

**நீர்வை. தி.மயூரகிரி சர்மா - யாழ்ப்பாணம்.**



ஆதிசங்கரரின் காலம் பற்றியும் அவரது வரலாற்றுச் செய்திகள் பற்றியும்பலவாறன ஆய்வுகள் நடைபெற்றுள்ளன. பல்வேறு குழப்ப நிலைகளும் உள்ளன. ஆனால் இப்போது பொதுவாக சங்கரரின் காலம் கி.பி 7ம்நூற்றாண்டளவினது என்றே கொள்ளப் படுகிறது. ஆதி சங்கரர் பற்றி இராமானுஜர் பல இடங்களில் பேசுவதால் சங்கரர்இராமானுஜருக்கு முற்பட்டவர். இராமானுஜர் 11ம் நூற்றாண்டுக் குரியவர். ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த வாசஸ்பதி மிற்ரா என்பவர் சங்கர பாஷ்யத்தை விவரிக்கிற பாமாதி என்ற நூலை எழுதியிருக் கிறார். எனவே இவருக்கும் சங்கரர்முற்பட்டவர். ஆகவே ஆதிசங்கரர் கட்டாயமாக 9ம் நூற்றாண்டுக்கு முன் வாழ்ந்தவர்.

இதனைஆய்வாளர்களும் பொதுவாக ஏற்றுக் கொண்டுள்ளனர். பௌத்த தத்துவாசிரியரான தர்மகீர்த்தி என்பவரின் பிரமாண வார்த்திக காரிகைஎன்ற நூலை சங்கரர் எடுத்துக் காட்டி அதனை விமர்சிப்பதால்தர்மகீர்த்தியின் காலத்திற்குச் சங்கரர் பிற்பட்டவர். 4ம் நூற்றாண்டைச் சேர்ந்த பாஹியன் என்ற சீனப் பௌத்த யாத்திரீகனால் தனது குறிப்புரையில் தர்மகீர்த்தியைச் சொல்லாததால் தர்மகீர்த்தி 4ம்நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்தவரா யிருக்கலாம். கி.பி 671ல் இந்தியா வந்த யீ ஜிங் தாம் என்பவர் தமது யாத்திரை பற்றியகுறிப்புரையில் தர்மகீர்த்தி பற்றிச் சொல்வதால் இவருக்கு முற்பட்டவர். மஹாகவி காளிதாசரின் காலம் கி.பி 3ம் 4ம் நூற்றாண்டு என்பதே பொதுவான கொள்கை. இவர் ஆதிசங்கரரைப் பற்றி ஏதும் குறிப்பிடாததால் ஆதிசங்கரரின்காலம் இவருக்குப் பிந்தையது. இது போலவே தென்னகத்தில் பெரும் பணியாற்றிய ஆதிசங்கரர் பற்றிய செய்திகள் சங்கநூல்களிலோ, திருக்குறள், சிலப்பதிகாரம், போன்றவற்றிலோ இன்மையால் இவற்றின் காலத்திற்குப் பின்னரே சங்கரர் அவதரித்தார்.

தேவாராசிரியர் காலத்தில் ஆதிசங்கரரும் வாழ்ந்திருக்கலாம். சில வேளைகளில் தேவாரா சிரியர் காலத்திற்கு முற்பட்டவராகக் கொள் ளவும் இடமுண்டு. தேவாரங்களில் காமகோட்டம் பற்றியும் வேதாந்தக் கோட் பாடுகள் பற்றியும் ஆங்காங்கே சிறப்பாகப் பேசப்பட்டுள்ளது. இவ்வகையாக நோக்கும் போது ஆதிசங்கரரின் காலம் கி.பி 5ம்நூற்றாண்டிற்கும்8ம் நூற்றாண்டுக்கும் இடையிலேயே அமைய வேண்டும்.இந்த மூன்று நூற்றாண்டு கால வரலாற்றிலும் சிறப்பாக.. பௌத்த சமண மதங்கள்தென்னகத்தில் கோலோச்சிய 7ம் நூற்றாண்டிலேயே ஆதிசங் கரரின் அவதாரம் அமைந்திருக்கும் என நம்பலாம். (6ம் 7ம் நூற்றாண்டுக்குப் பிறகு சமண பௌத்தமதங்கள் தென்னகத்தில் செல்வாக்கிழந்து போயின என்பது வரலாற்ற றிஞரின்பொதுமையான கருத்து) அவ்வாறா கில்.. காஞ்சி சங்கரமட ஆவணங்களை வைத்து ஆய்வு செய்பவர்கள் சங்கரரின் காலம் கி.மு 5ம்நூற்றாண்டு என்கிறார்களே..? என்றால் அதற்குச்சில சமாதானங்களைச் சொல்லலாம். பாரதத்தின் நாற்றிசைகளிலும் திருமடங்கள் நிறுவிய ஆதிசங்கரர்காஞ்சீபுரத்தில் சர்வக்ஞ பீடம் நிறுவினார். எனவே. பாரதம் முழுமையும் செல்வாக்குப் பெற்றதாயும், பாரிய கட்டமைப் புக் கொண்டதாயும் காஞ்சிமடம் விளங்கி யிருக்க வேண்டும். காஞ்சிக்கும் காஷ்மீருக்கும் இடையிலே பயணிப்பதானால் பல வருடங்கள் செல்லக்கூடிய அக்காலத்தில் இம்மடத்து ஆச்சார்யார்கள் காஷ்மீரிலே ராஜமரியாதை யுடன்விளங்கியதாக சங்கரமடத்து குரு பரம்பரை ஆவணங்கள் சொல்லுகின்றன. எனவே, சர்வக்ஞபீடமாகிய காஞ்சி மடத்திற்கு ஒரே காலத்திலேயே இரண்டு மூன்று ஆச்சார்யார்கள் பீடத்திலிருந்து அருளாட்சி செய்திருக்கலாம். அவர்களில்ஒருவர் வடதே சத்துக் கிளைமடத்தில் விளங்கியிருக்கலாம். ஒருவர் காஞ்சியிலேயே எழுந்தருளியிருந் திருக்கலாம்.

பகவத்பாதரால் யோகலிங்கம் ஸ்தாபிக்கப்பட்ட காஞ்சி காமகோடி பீடத்தின்ஆச்சார்யார்களுள் பலர் குகைகளிலே யோகத்திலும் தவத்திலுமே தங்கள் வாழ்நாளைக் கழித்ததாக மடத்து ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. எனவே, இப்படிஒரு ஆச்சார்யார் பீடாரோஹணம் செய்த பின் மடத்தில் இன்னொரு ஆச்சார் யரைப் பீடத்திருத்தி விட்டு தவத்திலேயே வாழ்வை கழித்திருக்கலாம் காஞ்சி மடத்தின் முதல் வராகிய ஆதிசங்கரரின் காலத்த வராகவே சுரேஸ்வரர், சர்வஜ்ஞாத்மேந்திரர், சத்யபோ தேந்திரர் ஆகிய அடுத்த மூன்று ஆச்சார் யார்களும் இருந்திருக்கலாம். இவர்களின் ஆட்சிக்காலத்தை ஒருவர்பின் ஒருவராக இட்டு வரலாற்றினை வரைகிற போது நீண்ட காலத்தைக் காட்டும்.ஆனால், ஒரே காலத் திலேயே இந்த நான்கு ஆச்சார்யர்களும் பீடத்தை அலங்கரித்தனர் என்று கொண்டால் 40-50 ஆண்டுகளுக்குள் இந்நால்வர் காலமும் அடங்கலாம். 5வது ஆச்சார்யரான ஞானானந் தேந்திரர் தமது சந்திரிகை என்ற நூலில் தம்குருவாக 3வது ஆச்சார்யரான சர்வக்ஞாத் மேந்திரரையே போற்றுவதும் இங்குசிந்திக் கத்தக்கது. இதே போல மடத்தின் 12வது ஆச்சார்யர் மடத்து நிர்வாத்தை தமது சீடரிடம் கொடுத்து விட்டு "சார்வபௌம" என்ற சிறப்பான யோகத்தை அனுசரித்தாராம். ஆனால், அவரின் சீடரான 13வது ஆச்சார்யரோ தாமும் தமது சீடரின் நிர்வாகத்தைக் கொடுத்து விட்டு காஞ்சி நகர்ப்புறத்திலே யோகநிஷ்டை பூண்டுவிட்டாராம். ஆக, 12வது 13வது 14வது ஆச்சார்யார்கள் ஒரே காலத்தில் இருந்திருக்க வேண்டும். இப்படி நிறைய ஆச்சார்யார்கள் தம் சீடரையே பீடத்திலிருத்தி விட்டு யோகத்திலும் தவத்திலும் வாழ்வைகழித் திருக்கிறார்கள்.

ஆனால், இப்படியான ஆச்சார்யார்களின் காலத்தை ஒன்றாக்கி நோக்காமல் ஒன்றன்பின் ஒன்றாக நிரையிட்டு நீண்ட கால வரிசை காட்டி விட்டார்களோ என்றுதோன்றுகிறது. காஞ்சி மடத்தின் பீடாச்சார்யர்கள் சில காலங்களில் காசியிலும் காஷ்மீரிலும் ஜகந்நாதத்திலும் முகாமிட்டு மடங்களை அமைத்து அருளாட்சி செய்திருக்கிறார்க்ள்.

இப்படி தொலை தூரங்களில் ஒரு பீடாச்சார்யர் நீண்ட காலம் இருந்தால் காஞ்சியில் நிச்சயமாக இன்னொரு ஆச்சார்யர் விளங்கி யிருப்பார். ஆகவே, இத்தகு நிலையில் ஒரே காலப்பகுதியில் இரண்டு மூன்று ஆச்சார் யார்கள்பீடாதிபதிகளாக விளங்கியிருக்கலாம். வழக்கமான பீடங்களிலும் மடங்களிலும இவ்வாறான சம்ப்ரதாயங்கள் இல்லாத போதிலும் சர்வக்ஞபீடம் என்ற வகையில் காஞ்சி மடத்தில் இந்நடைமுறை இருந் திருக்கலாம்.

கி.பி 11ம் நூற்றாண்டில் இந்தியாவில் இஸ்லாமியப் படையெடுப்புக்கள் பெரியளவில் நடைபெறும் வரை இவ்வாறு காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை செல்வாக்குப் பெற்ற சர்வக்ஞபீடமாக காஞ்சிமடம் ஒரே காலத்தி லேயே பல ஆச்சார்யார்களுடைய தாயிருந் திருக்கக் கூடும்.

மடத்து ஆவணங்களின் படி 47வது ஆச்சார்யராக விளங்கியவர் ஸ்ரீசந்திரசேக ரேந்திரர். (நான்காவது சந்திரசேகரேந்திரர்) இவர் காஷ்மீருக்கு விஜயம் செய்ததாகச் சொல்லப்படுகிறது. இவரது காலம் கி.பி 1100-1150 வரைஎன்று நம்பப்படுகிறது.

இவ் ஆச்சார்யரின் காலக்கணிப்பிற்கு ஆதார மாக இவர் காலத்தில் எழுந்த 1111ஜூலை 17ல் தெலுங்குச் சோழ அரசன் எழுதிய செப்புப் பட்டயம் இருக்கிறதாம். எனவே, கி.பி 1200ல் சிதம்பரத்தில் சித்தி பெற்ற 48வது ஆச்சார் யருக்கு முன் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்னர் ஆதிசங்கர பகவத்பாதர் அவதாரம் செய்திருக்கலாம். எனவே, கிபி 600களில் ஆதிசங்கரர் அவதரித்திருக்கலாம். இவர் தமது சமகாலத்தவரான ஞானசம்பந்தரை சௌந் தர்யலஹரியில் 'திராவிடசிசு' என்று போற்றினார் என்று கொள்வதும் ஏற்புடையதே..

நைஷதம் எழுதிய ஸ்ரீ ஹர்ஷவர்த்தனரையும் அபிநவகுப்தர் என்றபெரும்புலவரையும் வாதத்தில் வென்ற வல்லவராகத் திகழ்ந்தவர் மடத்தின் 48வதுஆச்சார்யாராகிய அத்வை தானந்த போதர்.

இவர் கி.பி 1200ல் சிதம்பரத்தில் சித்தி பெற்றார் என்று மடத்து ஆவணங்களே குறிப்பிடுகின்றன இந்த ஆச்சார்யார் காலத் திற்குப் பின்னர் இஸ் லாமியப் படையெடுப்புக் களால்காஞ்சி மடம் தன்னைச் சுருக்கிக் கொண்டது.

இதன் பின் வருகிற ஆச்சார்யார்கள் ஒருவர் பின் ஒருவர் பீடமேறியிருக்க வாய்ப்புகள் நிறைவாக உள்ளன. காஞ்சி மடத்து வரலாறு களும் இதன் பின் வரலாற்றடிப்ப டையில் சீரானகாலக்கணிப் புடன் தெளிவாக அமையும் என நம் பலாம்.

1200 களுக்குப் பின் காஞ்சி சங்கரமடம் சில காலம் காஞ்சியில் விளங்கிப்பின் இன்னும் தென்திசை நோக்கிச் சென்றதாகத் தெரிகிறது.

**தொடர்ச்சி. 25ம் பக்கம்.**

# Orientalische Textilien & Schmuck

Germany




தரமான
தங்க நகைகளுக்கு
உத்தரவாதமிக்க
நகை மாளிகை

Königswall 16 (Am HBF)
44137 Dortmund
Tel: 0231/162377 Fax: 49.0231/147836

உரிமையாளர்: எஸ்.ஜெகதீஸ்

சேலைகளின் சோலை!
நங்கையரின் நந்தவனம்
புன்னகைக்கும் பொன் நகைகள்
தங்களை வியப்புக்குள்ளாக்கி நிற்கும்.



# Orient Textiles & Jewellery

வட தென் இந்திய சேலைகள்
நங்கையர் விரும்பும்
Fancy Jewellery

165 Upper Tooting Road
SW17 7TJ-London
Tel:0208 68 23 958

U.K

எங்கள் நிறுவனத்தின் 17 வது ஆண்டு நிறைவில்
உங்கள் ஆதரவுக்கு நன்றி சொல்லி மகிழ்கின்றோம்!





# Travel AIR

Tel: 0202/4936921 ,
Fax: 0202/2443106
Tel: 0202/24431 04 - 05
Handy:0173-2850638

Luisen Str.46 , 42103 Wuppertal

23ம் பக்கத் தொடர்ச்சி..






இதற்கு அடிக்கடி நடந்த படையெடுப்புக்களும் கொள்ளைகளுமே காரணமாயின..48வது ஆச்சார்யரின் காலத்தின் பின்னர் சங்கரமடம் சர்வக்ஞபீடம் என்றநிலையிலிருந்து தன்னை ஓரளவுக்கு மட்டுப்படுத்தியிருக்க வேண்டும். நாட்டில் படையெடுப்புக்களும் போர்களும் குழப்பங்களும் இக்காலத்தில்பரவியிருந்தன. இந்த 48வது ஆச்சார்யார் வரையிலான காலத்தில் வாழ்ந்த ஆச்சார்யார்களில் ஏறத்தாழ பதினாறு ஆச்சார்யார்கள் குகைகளிலும் நகர்ப்புறங்களிலும் தவத்திலேயே தமது வாழ்வைக் கழித்ததாக காஞ்சி மடத்துவரலாறுகள் குறிப்பிடுகின்றன. அது போலவே இன்னும் பதினாறு ஆச்சார்யார்கள்காஷ்மீர் முதலிய வடதேசத்திலேயே கிளை மடம் அமைத்துப் பணி செய்திருக்க வேண்டும் என்பதற்கும் மடத்து வரலாறுகளில் இடமிருக்கிறது. இவ்வாறாக, ஒரே காலத்தில் இரண்டு தொடக்கம் நான்கு ஆச்சார்யார்கள் வரைஇருந்திருக்க வாய்ப்புகள் உண்டு. சர்வக்ஞபீடத்தின் இந்த மாபெரும் துறவரசு 1200 களுக்குப் பின் தளர்வுற்றது. அதற்குப் பின் கி.பி 1746ல் மடத்தின்62வது பீடாதிபதியான சுவாமிகள் மடத்தின் தலைமையகமாக கும்பகோணத்தினை மாற்றியமைத்து அங்கே அருளாட்சி செய்யத் தொடங்கும் வரையில் இடையில் உள்ள13 ஆச்சார்யார்களும் தம்மை பெரியதொரு ஆச்சார்யார் என்ற நிலையிலிருந்து மறைத்து மக்களோடு மக்களாக ஊர்களில் வாழ்ந்த தாகவும் கொள்ள முடிகிறது. 59வது ஆச்சார்யராகிய பகவந்நாம போதேந்திரர் வரலாறு போன்றன இவ்வாறு ஆச்சார்யார்கள் மறைந் தொழுகும் பாங்கிற்கு ஆதாரமாக உள்ளது. இவ்வாறு கும்பகோணத்தில் திருமடம் அமைத்த பின்னரே.. மீண்டும் சர்வக்ஞ பீடம் என்கிற உயர்வோடு கூடிய நிலை சங்கர மடத்திற்கு ஏற்பட்டிருக்க வேண்டும். அதன் பின்னரே 400 ஆண்டு கால தளர்வின் பின் மீள விஜய யாத்திரகள் ஆரம்பித்தாகவும் தெரிகிறது.

ஆக, கி.பி 600லிருந்து 1200 வரையான 600 ஆண்டு காலப்பகுதியில் சங்கரமடம் 48 ஆச்சார்யார்களுடையதாய் பிரம்மாண்டமான பீடமாக விளங்கியிருக்கும். பின்னர் 400 ஆண்டு கால தளர்வின் பின் மீளெழுச்சி பெற்றிருக்கிறது என்றும் கருதலாம். இந்த 400 ஆண்டு கால இடப்பெயர்வும் மறைந்தொழுகும் பாங்கும்வரலாற்றுக் குழப்பத்திற்கு வாய்ப்பளிப்பதாகி விட்டது என்றும் கருதலாம். இன்றைக்குச் சிலர் சர்வக்ஞபீடம் என்று காஞ்சிமடம் இருந்திருந்தால் ஏன்அது பற்றி இராமானுஜர், மத்வர், சைவ சித்தாந்த ஆசிரியர்கள், சைவாதீனகர்த்தர்கள், இராமானுஜர் வழி வந்த மடத்து ஜீயர்களின் வரலாற்றில் குறிப்புகள் இல்லை என்று கேட்கிறார்கள். இதற்குக் காரணமாகச் **சிலவற்றைக் குறிப்பிடலாம்..**

1. இராமானுஜர் காலத்திலிருந்து சங்கர மடம் காஞ்சியில் நிலை பெறாமல் ஒவ்வொரு ஊராக தமது ஆஸ்தானத்தை மாற்றத் தொடங்கி விட்டது. 2. சில வரலாறுகள் இராமானுஜர் பிரம்மசூத்திரம் தேடி காஷ்மீர் சென்றார் என்பதால் காஷ்மீரில் காஞ்சி சங்கர மடம் அக்காலத்தில் சிறப்புற்று இருந்திருக்கலாம். அதனை நாடி இராமானுஜர் அங்கு சென்றிருக்கலாம். எனவே, இவ்வாறு ஆராய்ந்தால் காஞ்சி சங்கரமடத்தின் வரலாறு 1400 ஆண்டுகளுக்குட்பட்டதாகச் சீர்மை பெறும்

அது போலவே, ஆதிசங்கரரின் காலம்கி.பி 7ம் நூற்றாண்டு என்று கொள்வதாகவும் இருக்கும். (சிருங்கேரி மடம் 8ம்-9ம் நூற்றாண்டு என்று கொள்கிறது.) இந்த 1400 ஆண்டுகளில் 70 ஆச்சார்யார்கள் ஸ்ரீ மடத்தில் எழுந்தருளியிருந்தார்கள் என்பது சிறப்பின்மேல் சிறப்பாகும்.

எது எவ்வாறாகிலும் காஞ்சி மடம் மற்றும் ஆதிசங்கரரின் வரலாறும் காலமும்தெளிவு பெற வேண்டும் என்பதே எமது ஆவலாகும். அது இன்றைக்கு மிகஅவசியமாகவும் அவசரமாகவும் உள்ளமையும் குறிப்பிடத் தக்கது. மூலாம்னாய சர்வக்ஞபீடத்தின் சிறப்பும் பெருமையும் உலகில் பரவ பகவத்பாதாளின் திரு வடிகளைப் பிரார்த்திப்போம்.




# குரும்பசிட்டிக் கிராமமும் முத்துமாரி அம்பாள் ஆலயமும்

**ஆன்மீகத்தென்றல் த.புவனேந்திரன்**


குரும்பசிட்டிக் கிராமம் சைவப் பண்பாட்டுடனும், சைவசமய மரபுகளுடனும், கட்டிக்காக்கப்பட்டு வந்த கிராமமாகும். அத்துடன் குரும்பசிட்டிக் கிராமம் முழுக்க முழுக்க சைவசமய மக்கள் வாழ்ந்த கிராமமாகும். இங்கு கோயில் கொண்ட எங்கள் முத்துமாரி அம்பாள் குரும்பசிட்டி மக்களின் சாந்திப் பீடமாகவும், எங்கள் ஊர் காவல் தெய்வமாகவும், வேண்டுவோருக்கு வேண்டும் வரங்களையும் அள்ளி அருளும் தெய்வமாகவும் இருந்துவந்தது யாவரும் அறிந்த உண்மை.

குறிப்பாக இங்கே நடைபெறுகின்ற திருவொம்பாவை பத்து நாள் மஹோற்சவம் மிகவும் பக்தி பூர்வமாகவும், புனிதமான தாகவும் அனுஸ்டிக்கப்பட்டு வருகின்றது. குரும்பசிட்டிக் கிராமம் பாரம்பரியமாக விவசாயிகளைக் கொண்டபோதிலும், இங்கு ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தினரும், கைதொழில்களை மேற்கொள்பவர்களும் மற்றும் நாட்டின் பல பாகங்களிலும் சென்று வர்த்தகம் செய்பவர்களும் இங்கு நடைபெறும் திருவொம்பாவை மஹோற்சவக் காலத்தில் யாவரும் ஒன்று சேர்ந்து முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் கூடி உற்சாகமாகவும் பக்தி பூர்வமாகவும் விழாக்களில் பங்குகொள்வதையும் காணலாம்.


எனக்குத் தெரிந்தவரை குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் தான் தொடர்ந்து இருபது ஆண்டுகளாக திருவொம்பாவை காலத்தில் பத்து நாட்களும் சைவப் பிரசங்கள் தொடர்ந்து நடைபெற்று வந்தன. யாழ்பாண மாவட்டத்தின் பல் வேறு பகுதிகளில் இருந்து பல சைவசமய அறிஞர்கள் திருவொம்பாவை பத்து நாட்களும் இரவு ஏழு மணி தொடங்கி எட்டுமணி வரை சமயப் பிரசங்களை ஆற்றி வந்தது மற்றய ஆலயங் களுக்கும் முன்மாதிரியாக இருந்தது எனலாம்.

குரும்பசிட்டி அம்பாள் ஆலயத்திலே சன்மார்க்க சபையால் ஆரம்பிக்கப்பட்ட சைவப் பிரசங்கங்கள் திருவொம்பாவைக் காலத்தில் தொடர்ந்தும் நடைபெற்று வந்தன. இவற்றை ஒழுங்கு செய்வதை பல ஆண்டுகளாக செய்துவந்தவர் அமரர். த. இராசரத்தினம் ஆசிரியராவார்.

பல சைவப் பெரியார்கள் வருடம் தோறும் எந்த விதமான நிதிகளையும் பெறாது, வந்து சமயப் பிரசங்கங்களை செய்வது ஓர் சிறப்பம்சமாகும்.



கிராம சேவையாளர்
திரு. க. செல்லத்துரை அவர்கள்



**அமரர்**
**கலாகேசரி**
**ஆ. தம்பித்துரை**

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டபோதிலும் குரும்பசிட்டியை தனது பிறந்த ஊராகவே மதித்து வாழ்ந்த ஸ்தபதி ஆறுமுகம் சிற்பாச்சாரி அவர்களின் புதல்வர் அமரர். “கலாகேசரி” ஆ.தம்பித்துரை அவர்கள் (வட மாகாண சித்திரக் கல்வி அதிகாரி) உருவாக்கிய சித்திரத்தேர் முத்துமாரி அம்பாள் ஆலயத் திற்கு சிறப்புச் சேர்த்ததை மறக்க முடி யாதது.


இங்கு நடைபெறும் தேர்த் திருவிழா மிகவும் சிறப்புடையதாகவும் அயல் கிராம மக்கள் அனைவரையும் சங்கமிக்க வைக்கும் ஒரு பெரும் விழாவாகவும் அன்று விளங்குகியது. தேர்த்திருவிழாவின் உபயகாரர் பிரபல வர்த்தகர் சமூகசேவையாளர் அமரர். பி.எஸ்.நடராஜா அவர்கள்.

இந்த ஆலயத்தை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்ற, காலம் சென்ற விதானையார் கதிரேசு செல்லத்துரை அவர்கள் இந்த ஆலய வளர்ச்சிக்காக தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்து ஆலயத்தை விரிவாக் கியதையும் என்றும் மறக்க முடியாது. இவர் காலத்தில் ஆலயத்தில் அம்பாள் வீதியுலா வருவதற்கான வாகனங்கள், சித்திரத் தேர், ஆலய உள்வீதி மண்டபங்கள் போன்றவை உருவாக்கம் பெற்றவையாகும். இவர் தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அம்பாள் ஆலய வளர்ச்சிக்கு அர்பணித்தவர் ஆவார்.

ஆலயத்தில் நடைபெறும் திருவிழாக்களில் அதற்குரிய நடைமுறைகளைப் பேணு வதிலும், அதற்கான ஆயத்தங்களைச் செய்வதிலும் முன்னின்று தொண்டாற்றி யவர்கள் மயில்வாகனம் சபாரத்தினம், பத்தமேனி கணபதிப்பிள்ளை, காசிப் பிள்ளை, தர்மலிங்கம் இன்னும பல இளய தலை முறையினருமாவார்கள். இங்கு முத்து மாரி அம்பாள் உற்சவ காலத்தில் உள்வீதி வலம் வரும்போது காலம் சென்ற இரசிக மணி கனக செந்தில்நாதன் அவர்கள் ஓதுகின்ற தேவார திருவாசகமும், சிவ புராணமும் பக்தியில் மெய்மறக்கச் செய்யும். அவர் ஓதும் போது அதைத் தொடர்ந்து அடியார்கள் ஓதுவார்கள். அவர் ஓதிய சிவபுராணம், திருவாசகம் போன்றவை உற்சவ காலங்களில் கேட்டு யாவருக்கும் மனப்பாடமாகிவிடும்.

எமது ஊர் காவடி என்ற அம்சத்திற்கு பேர் போனது. தாளக்காவடி, ஆட்டக் காவடி, துலாக்காவடி, தூக்குக்காவடி போன்றவை எங்கள் முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் முக்கியத்தும் பெற்றது.திரு தம்பிராசா அவர்கள் யாழ்மா வட்டத்தில் முதல் முதலாக தூக்குக் காவடியை எடுத்த பெருமைகுரியவராவர்.

அதேபோல பறவைக் காவடி எடுத்த பெருமை குரும்பசிட்டி அ. இந்துதாசன் அவர்களையே சாரும். இதை தொடர்ந்து பல இளஞர்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டனர்.



**அமரர். த. இராசரத்தினம்.**



**அமரர்**
**இரசிகமணி**
**கனக. செந்திநாதன்**

திருவெம்பாவைக் காலத்தில் நடைபெறுகின்ற சைவப்பிரசங்கங்களின் போது அமரர் திரு த. இராசரத்தினம் அவர்கள், திருவெம்பாவை ஆரம்பிற்பதற்கு முன்னதாகவே சைவப்பிரசங் கங்கள் செய்பவர்களுக்கு பிரசங்கங்கள் தொடர்பான விடயங்களை அறிவித்து, அவர்கள் என்ன தலைப்பில் பேசவேண்டும் என்ற விடயங்களை ஒழுங்கு செய்து, அதை அச்சிட்டு தெல்லிப்பழை உதவி அரசாங்க பிரிவிலுள்ள சகல இடங்களுக்கும் விளம்பரப் படுத்துவதும் அயல்கிராமங்களுக்கு அறியத்தருவதும் இவரது பெரும் சேவையே.

முத்துமாரி அம்பாள் ஆலயம் தொடர்பாக பல தோத்திர பாமாலைகள் அம்பாளின் திரு உருவப்படம், அம்பாள் தீருவூஞ்சல் பாடல்கள் போன்ற பல வெளியிடப்பட்டன. இவற்றை இலவசமாகப் பிரசுரித்த பெருமைக்குரியவர் சுன்னாகம் திருமகள் அழுத்தக முகாமையாளர் திரு மு. சபாரத்தினமாகும்.




நவராத்திரி காலங்களில் பத்து நாட்கள் விசேட பூஜைகளுடன் சூரன்போர், மானம்பூ போன்றவை மிக விசேடமானவையாகும். நவராத்திரி ஒன்பதாம் நாள் பூஜையில் அம்பாள் சர்வபூஜிதையாக அலங்கரிக்கப் பட்டு வெளிவீதியில் சூரனுடன் போர் புரிய வெளிவரும் காட்சி பலரையும் பக்திப் பரவசத்தில் ஆழ்த்திவிடும். அயல் கிராமங்களில் இது போன்ற எந்தப்பக்கமும் சுழலும் சூரன் இல்லாததால் அயல் கிராமக்களும் திரண்டு ஆலயம் வரு கிறார்கள்.

இந்தச் சூரனைச் சுழற்றி தலைகளை கச்சிதமாக மாற்றுவதிலும் பேர் பெற்றவர் ஆசாரியார் திரு சிங்கராசா அவர்கள். அவர் பல ஆண்டு காலமாக இந்தச் சூரன்போர் அன்று தனது பணியைச் திறம்பட செய்வதை பார்த்திருக்கிறேன். சூரனை தூக்கிவருபவர்களுக்கு முன்னும் பின்னும் வேகத்தடை மற்றும் வேகக் கட்டப்பாடு களை சீர்படுத்துபவர்கள் திரு மயில்வாகனம் சபாரத்தினமும் திரு. தருமலிங்கமும் ஆவார்கள். சூரனைத் தூக்குவதில் வல்லவர்களாக திரு காசிப்பிள்ளை. மற்றும் விக்கினேஸ்வரமுர்த்தி, திரு காந்தன், திரு கணேசன், திரு. தம்பிராசா போன்றவர்கள் வல்லமையுள்ளவர்களாக விளங்கினர்.

இவை எல்லாவற்றிற்கும் குரும்பசிட்டி மக்களின் மனதில் நிற்பவர் வர்த்தக செம்மல் இராமுவேலு செல்லத்துரை அவர்கள். நிதி பற்றாகுறையான அக்காலத்தில் இவர் தம் பெரு நிதியை சூரன் செய்வதற்கு வழங்கி நான்கு திசையும் சுழலும் இச் சூரனைசெய்வித்தது குரும்பசிட்டி மக்களுக்கு மனம் மகிழக் கூடிய தொன்றும், முத்துமாரி அம்பாளுக்கு அவர் செய்த பெரும் போற்றக்கூடிய திருப்பணியு மாகும். முத்துமாரி ஆம்பாள் ஆலயத்தில் நடைபெறும் சூனர்போர் திருவிழா உபயத்தை இவர் குடும்பமே நடாத்தி வந்தது.

மானம்பூ அன்று அம்பாள் பூரண அலங்காரத்துடன் ஆலத்திலிருந்து மாயெழு வயிரவர் கோயிலுக்கு ஊர்வலமாக புறப்படுவார். போகும் பாதை எங்கும் அம்பாளுக்கு அர்ச்சனைகளுடனும் பிரசா தங்களுடனும் அம்பாளை அர்ச்சித்து ஊர்மக்கள் வழியனுப்புவது மறக்க முடியாதது. (பல முறைகளில் அம்பாள் அர்சனைகளுக்கு நிறுத்தப் படும் போது காவு கட்டை என்னும் அம்பாளைத் தூக்கு பவர்கள் சிறிது இழைப்பாறுவதற்கு போடும் காவு கட்டை என்பதை போட்டிருக்கிறேன்) இவைகள் எனது மனதில் பதிந்திருந்தவைகள் மட்டுமே.




படம் உதவி: திரு.செ.விக்னேஸ்வரன்.யேர்மனி




**சைவப் புரவலர் ந.சிவசுப்பிரமணியம்**
**நீர்வேலி-யாழ்ப்பாணம்.**

இலட்சோப இலட்சம் பூக்கள் தினம் தினம் மலர்கின்றன. தாம் மலர்வதோடு மட்டுமன்றி உலகையும் மலரவைக்கின்றன.

தாமரை, செங்களிநீர், ஆம்பல், அல்லி போன்றவை தடாகங்களில் வாழ்கின்றன. இவை கதிரவன் கதிர்பட்டு காலையில் மலர்கின்றன.
செந்தாமரையிலும் வெண்தாமரையிலும், மகாலட்சுமி யுறைவதால் தாமரை ஏனைய மலர்களுக்கு எல்லாம் தலைவியாக விளங்குகின்றது.
மல்லிகை, முல்லை, ஊசிமுல்லை, மன்மதவானம், கொடி இனத்தைச் சேர்ந்தது. இவை கொடிகளாகப் படர்ந்து மலர்களைத் தருகின்றன.
நந்தியாவிட்டை, நித்தியகல்யாணி, பாரிசாதம், பொன்நொச்சி, என்பன செடி இனத்தைச் சேர்ந்தவை. இவை செடிமலர்களைத் தருகின்றன.
கடம்பு, சிவலிங்கப்பூ, பன்னீர், வில்வை, மரவகுப்பைச் சார்ந்து மலர் கொடுக்கின்றன. அவை மாலை நேரம் மலர்ந்து மணம் வீசுகின்றன.
பூக்கள் யாவும் மலர்வதால் மலர்கள் என்கின்றோம். இம்மலர்கள் யாதி, மதம், இனம், கடந்து தன்னை யாவரும் அன்பின் முத்திரையாய், பக்தியின் அர்ச்சனையாய் பாவிப்தாலும், இறைவனின் பாதங்களை அலங்கரிப்பதாலும் மலர்கள் மாமலரானது!


பிறந்த குழந்தையை சிரிக்கவைக்க தொட்டியில் பூக்கள், திருமணவீட்டின் மங்கலமாக மணமகன்,மணமகள் கழுத்தில் மாணமாலைகளாக பூக்கள். பூக்கள் இன்றி பெண்கள் இல்லை.
கூந்தலுக்கும், மலருக்கும் உள்ள நட்பு பூக்களைத்தவிர எவருக்கு உண்டு. கோவத்தில் உள்ள ஒரு பெண்ணையும் ஒரே ஒரு பூ இதழ்ளோரம் புன்னைகைக் கோலம் பூண்டிட வைத்து விடும்.

ஆலயங்களில் இந்த அற்புத மலர்களின் ஆரதனைகள் சொல்லில் அடங்காது.

சாத்துப்படி அப்பப்பா! அம்மனை அழகுப் பதுமையாக்கும். முருகனை முத்துப்பல்லக்கில் ஏற்றும். சிவனின் சிரிப்பில் கனக்குழி தெரியும். பார்பவர்கள் சொக்கிப்போய் இறைவனின் அருள் கடலில் நீந்த வைக்கும். இப்படி இயற்கை தந்த பூக்களின் பெருமைக்கு நிகர் இல்லை.
மலர்களில் நிறைய மருத்துவக் குணங்கள் உண்டு. செவ்வருத்தம்பூ சிறுகுழந்தைகளை நீராட்ட அரைத்து தலைக்கு வைக்கின்றோம். கண்ணோய் என்றதும் அடுக்கு நந்தியாவிட்டையை பலவாறு மருந்தாய்ப் பாவிக்கின்றோம். கர்ப்பிணிப்பெண்களின் சுகபிரசவத்திற்கும், குழந்தையின் பொன்நிறத்திற்கும் குங்குமப்பூ பாவிக்கின்றோம்.

**அர்ச்சனைப் பூக்கள்!**

இறைவனுக்கு மலர்களைக் காணிக்கையாக்க. இலட்சம் மலர்கள் தேவை இல்லை. உன்னல் முடிந்த ஒரு மலரால் கூட அர்ச்சனை செய்யலாம். ஆனால் இறைவனுக்கு எந்த எந்த மலர்கள் உகந்தவை என்பதனை எமது சமய சாத்திரங்கள் சொல்லி உள்ளன. அதனை தெரிந்து கொண்டால் பயன் அதிகம் பக்தியில் விழையும். ஒரு வருக்கு எது பிடிக்குமோ அதனை அளிப்பாதல் அவர்கள் மனம் குளிரவில்லையா? இறைவனும், நாமும் வேறு வேறு அல்ல. நம்மில் அவனும், அவனில் நாமும் உறைகின்றோம்.
மலர்களின் புனிதம் கெடாது, குளித்துவிட்டு வந்து அவற்றைப் பறிக்க வேண்டும்.
பூக்களைப் பறித்து தூய கூடையில் இட்டு எடுத்துச் செல்ல வேண்டும். நிலத்தில் விழுந்த பூக்களும், உதிர்த பூக்கள் இறைவனுக்கு உகந்தவை அல்ல. இறைவனுக்கு தூயமனங்களோடு பூமாலைகட்டி, பூச்சூடி அலங்கரித்து முத்தியின்பம் பெற்றவர்கள் எம் முன்னோர்கள். அவர்கள் வழியில் நாமும் இறைவன் அருள் பெறவேண்டும்.


திருமுருகன் திருமண மண்டபம்
திருமுருகன் திருமண மண்டபம்.
இன்று யாழ்ப்பாணத்தில் புகழ் பெற்ற கல்யாண மண்டபம்
திருமுருகன்
திருமண மண்டபமும்,
பல்பொருள் அங்காடியும்
தாயகத்தில் வாழும் தமிழ்மக்களும், வெளிநாடுகளில் இருந்து வரும் எங்கள் உடன்பிறப்புக்களும், திருமண, மற்றும் மங்கல வைபவங்கள் அனைத்தையும் சிறப்பாக நடத்துவதற்கு ஓர் சிறந்த மண்டபம் 'திருமுருகன் கல்யாண மண்டபம்"
உரிமையாளர்:
திரு. சிவசுப்பிரமணியம் (செட்டியார்)
தொலைபேசி: 077 66 60 211
திருமுருகன் கல்யாண மண்டபம்
(கந்தசுவாமி கோயில் வடக்குவீதி)
கரந்தன் வீதி
நீர்வேலி.
யாழ்ப்பாணம்.

# T.T.S Brothers

## Asien Supermarkt



**மக்களின் உள்ளங்கவர்ந்த ஸ்தாபனம்**

இலங்கை, இந்திய உப உணவுப் பொருட்கள், மற்றும் பசுமையான மரக்கறி வகைகள் அனைத்தும் தரமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

மங்கையர் விரும்பும்
அசல் 22 கரட் தங்கநகைகள்
நவீன டிசைன்களில் அழகுறத்
தருபவர்கள்

T.T.S.Brothers
Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

1011ம் ஆண்டின் புதிய டிசைன்களில்
அழகிய சேலைகள்!
வந்துவிட்டன!!
வந்து வாங்கி மகிழுங்கள்!!!

**TEL: 0231-819288 Fax: 0231-833431**
RHEINISCHE STR 52
**44137 DORTMUND**

T.T.S.Brothers
Garten Str.29
48147 Münster Tel: 0251 2301184





StaR-Impex

# StaR-Impex

யேர்மனியில் புகழ்பெற்ற

## மொத்த விற்பனை நிலையம்



**மளிகைப் பொருட்கள் மரக்கறிவகைகள் நேரடி இறக்குமதியாளர்கள்....**

Franziusstr.150
Eingang: Kipperstr. Tor 3
44147 Dortmund

Tel.: 0231/8602696
Mobil: 0172/2183703
Fax: 0231/8602698
E-Mail: star-impex@live.de

Lebensmittel Groß- & Einzelhandel
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-16.30

# முத்துச் சப்புரத்தில் குரும்பசிட்டி முத்துமாரி அம்மன்- 1966-1970




படம்:சிவத்தமிழ்

'Sivaththamil" M.K.S. Sivakumaran Brinker Höhe 13 - 58507 Lüdenscheid - Germany